மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

## அவதிப்படும் குழந்தைகளுக்காக அக்கறை கொள்வது யார்?



usa.mediamonitors.net

CHILDREN'S VOICE FOR HUMAN RIGHTS - 58 - 2011

# உறுதியில்லாப் போர்கள்

– டி.கே. ராஜலட்சுமி

அண்மைக்காலமாக பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு (ஐஎல்ஓ) போன்ற அமைப்புகள், தற்போதைய உலகளாவிய பொருளாதார – நிதி நெருக்கடியின் காரணங்களை விட அதன் விளைவுகள் குறித்து விவாதிப்பதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றன. குறிப்பாக ஐஎல்ஓ அமைப்பு, வளர்ச்சி குன்றிய நாடுகளிலும் வளரும் நாடுகளிலும் உள்ள மக்களுக்கு, மிக முக்கியமாகக் குழந்தைகளுக்கு இந்த நெருக்கடியால் ஏற்படும் தாக்கங்கள் குறித்து கவனம் செலுத்தியுள்ளது.

**1992ல் 6,36,248 ஆக இருந்த குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 2004ல் 2,48,594 ஆகச் சரிந்தது.**

பொருளாதாரச் சரிவு என்பது லட்சியமின்மைக்கும் செயலின்மைக்கும் ஒரு சாக்குப்போக்காகி விடக்கூடாது என்று ஐஎல்ஓ கூறுகிறது. இந்த நெருக்கடியைக் காரணம் காட்டி அடிப்படையான சமூக நலப் பணிகளுக்கான நிதி ஏற்பாடுகளை அரசாங்கங்களும் பன்னாட்டு நன்கொடையாளர்களும் வெட்டக்கூடும் என்ற அச்சம் பரவலாக இருக்கிறது. 107 வளரும் நாடுகளில் கிட்டத்தட்ட 40 விழுக்காடு வரையில் இந்த நெருக்கடியால் ஏற்படும் வறுமையின் தாக்கங்களுக்கு உள்ளாகக்கூடும் என்று உலக வங்கி கூறுகிறது.

ஐஎல்ஓ அமைப்பு "**குழந்தை உழைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை முடுக்கிவிடுதல்**" என்ற தலைப்பிலான தனது ஆய்வறிக்கையின் மூன்றாவது பகுதியை அண்மையில் வெளியிட்டுள்ளது. ஒரு நெருக்கடியான கட்டத்தில் இந்த அறிக்கை வெளியிடப்படுவதாக ஐஎல்ஓ கூறியுள்ளது. நான்கு ஆண்டுகளுக்கு முன் மகிழ்ச்சியடைவதற்கு ஒரு காரணம் இருந்தது. ஏனெனில் குழந்தை உழைப்பு தொடர்பாக நடந்த இரண்டு முக்கிய மாநாடுகளின் தீர்மானங்களை பல நாடுகள் அங்கீகரித்திருந்தன. 1973ல் நடந்த குறைந்தபட்ச ஊதிய மாநாடு (எண் 138), 1999ன் மிக மோசமான குழந்தை உழைப்பு முறைகள் பற்றிய மாநாடு (எண் 182) ஆகியவைதான் அந்த இரண்டு மாநாடுகள். பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் மேம்பாடு அமைப்பில் (ஓஇசிடீ) அங்கம் வகிக்கிற நாடுகளில், ஒரு சிலவற்றைத் தவிர்த்து பெரும்பாலான நாடுகள், அந்த மாநாடுகள் நிறைவேற்றிய தீர்மானங்களின் அடிப்படையில் செயல்படப் போவதாக உறுதியளித்தன. வேடிக்கை என்னவென்றால், அரசாங்கங்கள் தங்களது நாடுகளின் நிதி நிறுவனங்களை மீட்பதற்கு பொது செலவின நிதியிலிருந்து ஒதுக்கிய நிதியோடு, அல்லது ஊக்கத் திட்டங்களுக்காக ஒதுக்கிய நிதியோடு ஒப்பிட்டால், உலக அளவில் குழந்தை உழைப்பு முறையை ஒழிப்பதற்கு ஆகக்கூடிய செலவு மிகவும் சொற்பம்தான்.

ஐஎல்ஓ, "**குழந்தை உழைப்பு இல்லாத எதிர்காலத்தை நோக்கி**" என்ற பொருத்தமான தலைப்பில், தனது முதல் உலக அறிக்கையை 2002ல் வெளியிட்டது. 2006ல் வெளியான இரண்டாவது அறிக்கைக்கு "**குழந்தை உழைப்புக்கு முடிவு – எட்டக் கூடிய தொலைவில்**" என்று தலைப்பிட்டிருந்தது. குழந்தை உழைப்பில் மிக மோசமான முறைகளை ஒழிப்பதற்கு அதில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருந்தது. ஐஎல்ஓ அமைப்பில் அங்கம் வகிக்கும் நாடுகள் 2008ம் ஆண்டு இறுதிக்குள், பொருத்தமான, கால வரையறைக்கு உட்பட்ட நடவடிக்கைகளை வகுத்து நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், அண்மையில் வந்துள்ள அறிக்கை அதற்கான நம்பிக்கையை அளிப்பதாக இல்லை. மாறாக, ஆபத்தான வேலைகளில் ஈடுபடும் குழந்தைகளின் எண்ணிக்கையைக் குறைப்பதன் விகிதம்தான் சரிவடைந்துள்ளது.

1999 வரையில், ஆபத்தான வேலைகள் என்றால் என்ன என்பது குறித்து உலக அளவிலான ஒரு புரிதலோ உடன்பாடோ கிடையாது. அத்தகைய வேலைகளில் குழந்தைகளை ஈடுபடுத்த எவ்விதமான தடையாணையும் கிடையாது. 2006ல் ஐஎல்ஓ ஒரு லட்சியத்தை அறிவித்தது. 2016ம் ஆண்டுக்குள் குழந்தை உழைப்பு முறையை ஒழிப்பது என்பதே அந்த லட்சியம். அறிவிக்கப்பட்ட கால அளவில் பாதியைத் தாண்டியாகிவிட்டது. ஆனால் அந்த லட்சியம் நிறைவேறுமா என்பது இன்னமும் புரியாத புதிராகவே இருக்கிறது. குழந்தை உழைப்பு ஒழிப்புக்கான பன்னாட்டுத் திட்டம் அடுத்த இரண்டு ஆண்டுகளில் தனது 20ம் ஆண்டில் நுழைய இருக்கும் நிலையில், இது பன்மடங்கு கவலையளிப்பதாக இருக்கிறது.

சில ஆக்கப்பூர்வமான நிகழ்ச்சிப்போக்குகளும் உண்டுதான். குழந்தை உழைப்பு தொடர்பாக முத்தரப்பு முயற்சிகள் அதிகரித்துள்ளன, தெற்கு நாடுகளிடையேயான ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது, நோக்கமுள்ள சமூகப் பேச்சுவார்த்தைகள் அதிகரித்துள்ளன, ஆபத்தான வேலைகளில் பெண் குழந்தைகளை ஈடுபடுத்துவது குறைந்துள்ளது. அனைவருக்கும் கல்வி என்பது ஏற்கத்தக்க லட்சியமாக இருக்க வேண்டும் என்ற உலகளாவிய பொதுக்கருத்து வளர்ந்து வருகிறது.

வருத்தத்திற்குரிய நிகழ்ச்சிப்போக்குகளாக பின்வருவனவற்றைக் கூறலாம்: மரியாதையான பணி நிலைகள் குறித்த உலகளாவிய உடன்பாடுகள் பல கையெழுத்தாகியுள்ள போதிலும் கூட, நாடுகளிடையேயும் அந்தந்த நாட்டிற்கு உள்ளேயும் இதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் சீராக இல்லை. உடன்பாடுகள் காகிதத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, முழுமையான குழந்தை உழைப்பு முறையை ஒழிப்பதில் அர்த்தமுள்ள நடவடிக்கைகளாக மாறவில்லை. இதைப் பற்றி உலக அளவில் ஆரவாரமாகப் பேசப்படுகிறதேயன்றி, குழந்தைகளைத் தொழிலாளர் படையில் தள்ளிவிடும் நிலைமையை மாற்றுவதற்கு அடிப்படையாக, அதற்கான துறைகளில் அதிக அளவு செலவு செய்தாக வேண்டும் என்பதில் அரசாங்கங்களுக்கு அக்கறை இல்லை. குறிப்பாக தெற்கு ஆசிய நாடுகளில் பணித்தலங்களுக்கு உள்ளேயும், பள்ளித்தலங்களுக்கு வெளியேயும் ஏன் குழந்தைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு முக்கியக் காரணமாகும். உதவி வழங்கக்கூடிய நாடுகள் இதில் தங்களுடைய உறுதிப்பாட்டைக் குறைத்துக்கொள்வது பற்றியும், குழந்தை உழைப்பு முறை ஒழிப்புக்கான முயற்சிகள் தேக்க நிலையை அடைந்திருப்பது பற்றியும் ஐஎல்ஓ வெளிப்படையாகவே கருத்துக் கூறியுள்ளது. சொல்லப்போனால், சிறார் மற்றும் 15–17 வயது பிரிவில் உள்ளவர்களிடையே குழந்தைத் தொழிலாளர்களாக இருப்போர் 2006ம் ஆண்டிலிருந்து அதிகரித்து வந்துள்ளது.

ஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனம் சார்ந்த நாடுகள் கவனிக்கப்பட வேண்டியவை என்று இரண்டாவது அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. ஆயினும் அந்தப் பகுதியில் உலகத்தின் கவனம் குறைந்துபோனது ஏன் என்றும் ஐஎல்ஓ கேட்டுள்ளது. சமுதாயப் பாதுகாப்பு, வேலை வாய்ப்பு நடவடிக்கைகளோடு இணைந்ததாக “வறுமை ஒழிப்பு நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்” என்பதும் அவசியம் என்று அனைத்து நாடுகளும் ஒப்புக்கொண்டுள்ளன. இது (சந்தையில்) கூடுதல் தேவைகளை ஏற்படுத்த உதவும், அதே நேரத்தில் வறுமையில் வாழும் குடும்பங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் களையப்படுவதற்கு இட்டுச்செல்லும் என்று கருதப்பட்டது. ஆனால், பிரேசில் போன்ற சில நாடுகள் தவிர்த்து மற்ற நாடுகளில் இவ்வாறு நடக்கவில்லை என்பது வெளிப்படை.

**“அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்கள் 14 வயதை நிறைவு செய்யும் வரையில் இலவச, கட்டாயக் கல்வி வழங்க பத்தாண்டு காலத்தில் அரசு நடவடிக்கை எடுக்கும்” என்று அரசமைப்பு சாசனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது.**

ஒரே மாதிரியான அடிப்படைக் கல்வி (முழுமையான தொடக்கப் பள்ளிக் கல்வி, உயர்நிலைப் பள்ளியிலும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் படிப்பு), சமூகப் பாதுகாப்புக்கான அடித்தளம் அமைத்தல், பயன்விளைவிக்கத்தக்க வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகிய கொள்கைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருப்பது குறித்தும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. குழந்தைத் தொழிலாளர் நிலை குறித்த தாக்கம் தடுக்கப்பட்டாக வேண்டும் என்று அந்த அறிக்கை திட்டவட்டமாகக் கூறுகிறது. குழந்தைகளைப் பள்ளிகளுக்குச் செல்ல விடாமல் தடுத்து, வேலைக்குச் செல்லுமாறு தள்ளிவிடுவதில் குடும்ப வறுமையை விடவும் கொள்கை வறுமையே கூடுதல் காரணமாக இருக்கிறது என்றும் அந்த அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

பிரேசில், சீனா ஆகிய நாடுகளின் வெற்றிக் கதைகள் மற்ற நாடுகளிலும் பின்பற்றப்பட வேண்டியவை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது. 2000–2004 காலகட்டத்தில் 60க்கு மேற்பட்ட நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் துணையோடு, ஒரு நுட்பமான காட்சி புலப்படுத்தப்படுகிறது. ஒட்டு மொத்தத்தில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை ஓரளவுக்குக் குறைந்திருக்கிறது. ஆனால் இன்னமும் 21 கோடியே 50 லட்சம் குழந்தைகள் வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது ஏன், அவர்களிலும் 11 கோடியே 50 லட்சம் பேர் ஆபத்தான வேலைகளில் ஈடுபடுத்தப்படுவது ஏன் என்பதற்கு எந்த விளக்கமும் இல்லை. மிக அதிக எண்ணிக்கையில் குழந்தைத் தொழிலாளர்களை ஈடுபடுத்துவது விவசாயத் துறைதான்.

15–17 வயதுப் பிரிவினரிடையே குழந்தைத் தொழிலாளர்கள் எண்ணிக்கை 20 விழுக்காடு அதிகரித்துள்ளது. மொத்தக் கணக்கில் சொல்வதானால்,

இக்குழந்தைகளின் எண்ணிக்கை 5 கோடியே 20 லட்சம் என்பதிலிருந்து 6 கோடியே 20 லட்சமாக அதிகரித்துவிட்டது. 5–17 வயதுப் பிரிவினரிடையேயும் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. எனினும், 2004ம் ஆண்டு முதல், குழந்தைத் தொழிலாளர்களை அனுமதிக்கத்தக்க வேலைப்பிரிவுகளில் அவர்களது எண்ணிக்கை குறைந்து வந்துள்ளது. ஆபத்தான வேலைகளில் பெண் குழந்தைகளின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது என்பது மற்றொரு ஆக்கப்பூர்வமான அம்சம்; சேவைத் துறைகளில் அதிகமான பெண் குழந்தைகள் பணிபுரிகிறார்கள்; ஆண் குழந்தைகள் விவசாயத் துறையில் அதிகமாக இருக்கிறார்கள்.

## பிரேசில் முன்னுதாரணம்

பிரேசில் என்ன செய்தது என்பது குறிப்பிடப்பட வேண்டியதாகும். கல்வி, குழந்தைத் தொழிலாளர் தொடர்பான அறிக்கைகளில் இது பற்றி தொடர்ந்து கூறப்பட்டு வருகிறது. 1980களின் பிற்பகுதியில் பிரேசில் அரசு குழந்தைத் தொழிலாளர் முறைக்கு முடிவு கட்டுவதாக உறுதியளித்தது. குழந்தைகளையும் இளைஞர்களையும் பாதுகாக்க சட்டம் கொண்டுவந்தது. இது ஒரு விசயத்தைத் தெளிவுபடுத்தியது – அதாவது குழந்தைத் தொழிலாளர் முறையும் கல்வி உரிமையும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போக முடியாதவை.

அதற்கடுத்த பத்தாண்டுகளில் வேலைகளில் ஈடுபட்டிருந்த 10–17 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளின் எண்ணிக்கையில் 36 விழுக்காடு குறைந்தது. 5–9 வயதுப் பிரிவில் இவ்வாறு குறைவது என்பது இன்னும் கூர்மையாக இருந்தது. 1992ல் 6,36,248 ஆக இருந்த குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை 2004ல் 2,48,594 ஆகச் சரிந்தது. அரசாங்கத்தின் உறுதிப்பாடு மட்டுமல்லாமல், மிக அதிக அளவிற்கு சமூக ஒத்துழைப்பு திரட்டப்பட்டது, தொழிற்சங்கங்களும் தொழில்நிர்வாகங்களும் சம்பந்தப்பட்ட ஒரு முத்தரப்பு அணுகுமுறை, கட்டாய பண மாற்று நடைமுறை, குழந்தைகளை இரு மடங்கு நேரம் பள்ளிகளிலேயே இருக்க வைக்கிற நடைமுறை உத்தி என்று இந்த இலக்கை அடைவதற்கு இதர ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன.

## கேரள வழி

சமூக மேம்பாட்டில் கேரள உதாரணத்திற்கு இந்த அறிக்கை முக்கியத்துவம் அளித்துள்ளது. கேரளத்தில் நிலச்சீர்திருத்தம், உணவுப் பாதுகாப்பு, கல்வி, பொது மருத்துவம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. தொடக்கக்கல்வியைப் பொறுத்தவரையில் கேரள அரசு செலவிடுவது, ஏனைய மாநிலங்களை விட மிக அதிகம்தான்.

மைரோன் வெய்னர் (அமெரிக்காவைச் சேர்ந்த அரசியல் அறிவியல் பேராசிரியர்) 1991ல் '**இந்தியாவில் குழந்தையும் அரசும்: குழந்தைத் தொழிலாளர்களும் கல்வியும் ஒரு ஒப்பீட்டு நோக்கில்**' என்ற ஒரு புத்தகம் எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்டுகிற ஐஎல்ஓ அறிக்கை, 1960ம் ஆண்டுகளில் கேரளம் கல்விக்காக தனது வருவாயிலிருந்து 36 விழுக்காடு செலவிட்டது என்றும், அது இந்தியாவின் பணக்கார மாநிலங்களை விட மிக அதிகம் என்றும் கூறியுள்ளது. 1970ம் ஆண்டு வாக்கில், கேரளத்தில் வேலைக்குச் செல்வோரில் குழந்தைகளின் பங்கு 1.9 விழுக்காடாகக் குறைந்தது. ஆனால் அதே ஆண்டில் தேசிய அளவில் தொழிலாளர்களிடையே குழந்தைகளின் பங்கு 7.1 விழுக்காடாக இருந்தது. மற்ற மாநிலங்களுக்கு கேரளம் ஒரு முன்னுதாரணமாக இருக்க முடியும், இந்தியாவுக்கும் பொதுவாக தெற்காசிய நாடுகளுக்குமான வட்டாரம் சார்ந்த வழிமுறையில் கேரளம் ஒரு அங்கமாகத் திகழ முடியும் என்று அந்த அறிக்கை கூறுகிறது.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிக்க, கடந்த 20 ஆண்டுகளாக எந்த வெற்றியுமில்லாமல் இந்தியா முயன்று வந்திருக்கிறது. 1992ல், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்புக்கான ஐஎல்ஓ திட்டத்தில் முதலில் கையெழுத்திட்ட நாடுகளில் ஒன்று இந்தியா. ஆனால் பிரேசில் போலவோ, அல்லது கேரள மாநிலத்தைப் போலவோ நாடு தழுவிய அளவில் கல்விக்காக இந்தியாவில் கல்விக்கான அரசுச் செலவினம் அதிகரிக்கப்படவில்லை. “வறுமையிலிருந்து விடுபட” புதிய ஆக்கப்பூர்வமான, நிலையாகப் பயனளிக்கக்கூடிய திட்டம் நடவடிக்கைகள் எதையும் இந்தியா உருவாக்கவில்லை. “அனைத்துக் குழந்தைகளுக்கும் அவர்கள் 14 வயதை நிறைவு செய்யும் வரையில் இலவச, கட்டாயக் கல்வி வழங்க பத்தாண்டு காலத்தில் அரசு நடவடிக்கை எடுக்கும்” என்று அரசமைப்பு சாசனத்தில் உறுதியளிக்கப்பட்டுள்ளது. அந்த உறுதிமொழி ஒவ்வொரு பத்தாண்டு காலத்திற்கும் நீட்டிக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. அந்த உறுதிப்பாடு “6 முதல் 14 வயது வரையிலான” பிரிவினருக்கு என சுருக்கப்பட்டுவிட்டது. சமச்சீர் கல்வி என்பது மாநில அரசுகளின் பொறுப்பாக்கப்பட்டுவிட்டது. மாநில அரசுகளுக்கோ இதனை நிறைவேற்றுவதற்கான அரசியல் உறுதி இல்லை.

கல்வி மட்டுமே முழுத் தீர்வாகாது என்று ஐஎல்ஓ கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. கல்வி வழங்குவது

என்பதோடு இணைந்ததாக அதற்காக – குறிப்பாக தொடக்கநிலைக் கல்விக்காக – அரசு செலவிட வேண்டும் என்று அந்த அறிக்கை கூறுகிறது. அதற்காக நடுநிலைக் கல்வி, உயர் கல்வி ஆகியவற்றைப் புறக்கணித்துவிட வேண்டும் என்பதல்ல.

**முறைசாரா கல்வி**

இந்தியாவிலும் இதர பல நாடுகளிலும் முறைசாராக் கல்வி எப்படி வழங்கப்படுவது பற்றி ஐஎல்ஏ அறிக்கை விமர்சிக்கிறது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கு முறைசாராக் கல்வி ஒரு நிபந்தனையற்ற அணுகுமுறையாக இருக்க முடியாது என்று அது கூறுகிறது. முறைசாராக் கல்வி ஒரு வழிமுறையாக இருக்கலாமேயன்றி அது மட்டுமே இறுதி இலக்காக இருக்க முடியாது என்கிறது.

முறைசாராக் கல்வியை மட்டுமே சார்ந்திருப்பது முறை சார்ந்த கல்வி வழங்குவதில் பாதிப்புகளை, விரும்பாமலே ஏற்படுத்திவிடக்கூடும் என்றும் வேலைகளில் ஈடுபடுத்தப்படும் குழந்தைகள் மாறுவதற்கான ஒரு ஏற்பாடாகச் செயல்படுவதில் முறைசாராக் கல்வி தோல்வியடையக்கூடும் உலக நிலை குறித்த இரண்டாவது அறிக்கை எச்சரிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதானால், இதுதான் இரண்டாவது வாய்ப்பு என்பதற்கு மாறாக இது இரண்டாவது நல்ல வழியாக மட்டுமே இருக்க முடியும்.

நம் சிந்தனைக்காக பின்வரும் தகவல்: உலகில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பது தெற்கு ஆசிய நாடுகளில்தான். இப்போது, சில தெற்காசிய நாடுகளில் கல்விக்காக செய்யப்படும் நிதி ஒதுக்கீடுகளை ஒப்பிட்டுப் பார்ப்போம். ஆப்பிரிக்காவின் சஹாரா பாலைவனம் சார்ந்த, குறைந்த வருவாய் உள்ள நாடுகளில் பாதி நாடுகள் தங்கள் தேசிய வருவாயில் 4 விழுக்காட்டிற்குக் குறைவாகக் கல்விக்காகச் செலவிடுகின்றன. தெற்கு ஆசிய நாடுகளின் புள்ளிவிவரமோ இதை விட மோசமாக இருக்கிறது. பங்களா தேஷ் 2.6 விழுக்காடும், பாகிஸ்தான் 2.7 விழுக்காடும் செலவிடுகின்றன. வளர்ந்து வரும் பொருளாதாரத்தைக் கொண்ட இந்தியாவில் 3.3 விழுக்காடு ஒதுக்கப்படுகிறது. இந்தியர்களின் சராசரி வருமானம் சில ஆப்பிரிக்க நாடுகளை விடவும் மிக அதிகம். இருந்தபோதிலும் இந்தியாவில் கல்விக்காக ஒதுக்கப்படும் பட்ஜெட் நிதி இந்த நாடுகளை விடக் குறைவு.

ராணுவச் செலவுகளுக்கும் கல்விச் செலவுகளுக்கும் ஒதுக்கப்பட்ட நிதி பற்றி ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெஃப்) தெரிவிக்கும் தகவல்கள் இவை: 1995 முதல் 2005 வரையிலான பத்தாண்டு காலத்தில் இந்தியாவில் மத்திய அரசின் செலவினங்களில் கல்விக்காக ஒதுக்கப்பட்டது 2 விழுக்காடுதான், பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்பட்டதோ 13 விழுக்காடு. பாகிஸ்தானில் கல்விக்காக ஒதுக்கப்பட்டது 1 விழுக்காடு, பாதுகாப்புத் துறைக்கு ஒதுக்கப்பட்டது 20 விழுக்காடு. பிரேசில் நாட்டு அரசு பாதுகாப்புத் துறைக்கு செலவிட்டதை விட (3விழுக்காடு) இரு மடங்கு நிதியைக் கல்விக்காகச் செலவிட்டது. துருக்கியில் கல்விக்காகச் செலவிடப்பட்ட 10 விழுக்காடு, பாதுகாப்புத் துறைக்காக ஒதுக்கப்பட்டது 8 விழுக்காடு.

இந்த நிலவரங்களையும், அரசாங்கங்களின் மக்கிப்போகும் உறுதிப்பாடுகளையும் பார்க்கிறபோது, ஒட்டு மொத்த முன்னேற்றத்தின் வேகம் என்பது மிக மெதுவாகவே இருக்கும் என்பது தெரிகிறது. குழந்தைத் தொழிலாளர்கள் மிக அதிகமாக இருப்பது தெற்கு ஆசிய நாடுகளில்தான் என்ற பெயரும் மேலும் பல பத்தாண்டுகளுக்குத் தொடரவே செய்யும். உலகில் இன்று பள்ளிகளுக்கு வராத குழந்தைகளின் எண்ணிக்கை மிக அதிகமாக இருப்பது இந்தியாவிலும் பாகிஸ்தானிலும்தான். இந்த நாடுகளில் குழந்தைத் தொழிலாளர் எண்ணிக்கை குறைந்துவரும் வேகம் என்பது ஊக்கமளிப்பதாக இல்லை. பள்ளிக்குச் செல்லாத பெண் குழந்தைகளின் எண்ணிக்கை 1999ல் 58 விழுக்காடாக இருந்தது, தற்போது அது 54 விழுக்காடாகத்தான் குறைந்திருக்கிறது.

1979ஆம் ஆண்டிலிருந்து, வேறு எந்த நாட்டையும் விட மிக அதிகமான குடிமக்களை வறுமையின் பிடியிலிருந்து விடுவித்த சீனா தனது பெரும்பாலான குழந்தைகளுக்குத் தொடக்கக்கல்வி கிடைக்கச் செய்துள்ளது என்றும் ஐஎல்ஓ அறிக்கை கூறுகிறது. 2009 செப்டம்பரில் 20–நாடுகள் அமைப்பிற்கு (ஜி–20), நாடுகளின் செயல்பாடு தொடர்பாக ஐஎல்ஓ அளித்த அறிக்கையில், குழந்தைத் தொழிலாளர் முறையையும் பாலியல் தொழிலுக்காகக் குழந்தைகள் கடத்தப்படுவதையும் ஒழிப்பதற்கான நடவடிக்கைகள் போதுமான அளவுக்கு மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவித்துள்ளது. நிலைமை இப்படித்தான் கட்டுப்படுத்தப்படாமல் தொடரும் என்றால் அதன் விளைவுகள் வளர்ந்த நாடுகளிலும் கூட நாசகரமாகவே அமையும். ✪

**– Frontline, June 2010**

# தமிழகத்தில் அரசினர் (ஆதிதிராவிடர் நல) விடுதிகளில் கல்லூரி மாணவர்கள் மீதான பாகுபாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்த கலந்துரையாடல் மற்றும் பொது விசாரணை

*16 பிப்ரவரி 2011, சென்னை*

# பத்திரிக்கையாளர் வெளியீடு

**அரசினர் (ஆதிதிராவிடர் நல) விடுதிகளில் கல்லூரி மாணவர்கள் தங்கள் விடுதிகளில் நடக்கும் பாகுபாடு மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து தங்களது கருத்தை வெளியிடுவதற்காக பல மனித உரிமை அமைப்புகள் மற்றும் தலித் உரிமைக்கான அமைப்புக்கள் இணைந்து கலந்துரையாடல் மற்றும் பொது விசாரணையை 16, பிப்ரவரி 2011 அன்று நடத்தியது.** இந்த பொது விசாரணையில் **திரு.V.A.ரமேஷ் நாதன்,** இயக்குநர், SASY, **திரு.N.தயாளன்,** இயக்குநர், HRDF, **திருமிகு.A.காந்திமதி,** ஆராய்ச்சியாளர், LAW Trust, **திரு.M.ஜீவா,** அமைப்பாளர் CCJAT, இயக்குநர், SIRD, **திரு.நீதிராஜன்,** மாநில குழு உறுப்பினர், தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மற்றும் **திருமிகு.M.ஜெயராணி,** பத்திரிக்கையாளர் ஆகியோர் பங்கேற்றனர்.

அரசு கல்லூரி மாணவர்கள் விடுதி – வில்லிவாக்கம், அரசு முதுநிலை மாணவர் விடுதி– இராயபுரம், அரசு கல்லூரி மாணவர் விடுதி – கோடம்பாக்கம், அரசு கல்லூரி மாணவர் விடுதி – நந்தனம், திண்டிவனம் கோவிந்தசாமி கலைகல்லூரி ஆதிதிராவிடர் விடுதி ஆகிய விடுதிகளிலிருந்து 18க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த பொது விசாரணையில் கலந்து கொண்டு வாக்குமூலம் அளித்தனர். இந்த பொது விசாரணையில் 63 கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர். மேலும் கல்லூரி மாணவர்களின் நிலைக்குறித்து இந்திய மாணவர்கள் சங்கத்தினர் பகிர்வு செய்தனர். வான் முகில் நிறுவனத்திலிருந்து திருநெல்வேலி மாவட்டத்தின் விடுதி குறித்த ஆய்வில் கண்டறிந்தவைகள் மற்றும் பரிந்துரைகளை பகிர்ந்து கொண்டனர்.

கல்லூரி மாணவர்களுக்கான ஆதிதிராவிடர் நல விடுதிகளில் ஒட்டுமொத்த மனித உரிமை தரங்களும் மீறப்பட்டு விடுதிகள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன என்பதே எங்களின் நிலைப்பாடு. மாணவர்கள் புறக்கணிக்கப்படுவது, மனிதத் தரத்திற்கு உகந்திராத வாழ்நிலை, துன்புறுத்தல்கள், சுகாதாரமற்ற நிலை, தரமற்ற உணவு போன்றவை பெரும்பாலான விடுதிகளின் நிலைமையாகத் தொடர்ந்து இருந்து வருகிறது. இவ்விடுதிகளுக்கு ஒதுக்கப்படும் நிதி அதற்கென பயன்படுத்தப்படாமல் பல்வேறு வழிகளில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு லஞ்சமாகவும், ஒதுக்கப்பட்ட மொத்த தொகையில் சிறிதளவே செலவிடப்பட்டு மீதம் பெருந்தொகை முறையற்ற வழிகளில் வழிந்தோடிவிடுகிறது. இந்நிலைமை தலித் பள்ளி விடுதிகள் மட்டுமில்லை, முதுகலை, தொழில்நுட்ப நிறுவனங்களில் பயிலும் தலித் மாணவர்களின் விடுதிகளின் நிலைமையும் இதுதான். இவ்விடுதிகளில் தங்கியுள்ள தலித் மாணவிகள் பல்வேறு தொல்லைகள், துன்புறுத்தல்களுக்கு ஆளாவதற்கு ஏதுவான சூழலே நிலவி வருகிறது. இந்நிலை புதிதானவை அல்ல, தொன்றுத்தொட்டவை. இவ்விடுதிகளின் நிலைமை குறித்த அறிக்கைகள், புகார்கள் அடுத்தடுத்து வந்த மாநில அரசுகளிடம் சமர்ப்பிக்கப்பட்ட போதும், நிதி ஒதுக்கீட்டில் சிறு முன்னேற்றம் தவிர வேறு எந்தவித மாற்றத்தையும் அரசுகள் இதுவரையும் கொண்டுவரவில்லை. விடுதிகளின் நிலைமை இவ்வாறு இருக்கையில் தலித் மாணவர்கள் எவ்வாறு சிறந்த கல்வி பயில முடியும், அவர்களது லட்சியத்தை அடைய முடியும். இவ்விடுதிகளின் நிலைமையை இன்னும் கூறவேண்டுமானால் சுகாதாரமான குடிநீர் இன்மை, கழிவறைகளில் தண்ணீர் இல்லாமல் முறையாக பராமரிக்கப்படாமல் பயன்படுத்த முடியாத நிலைமை.

தலித் விடுதிகளின் இத்தகைய நிலைமை இந்திய அரசியல் சாசன சரத்து 14, 21, 19 மற்றும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சட்டங்களான ஐக்கிய நாடுகளின் மனித உரிமை குறித்த பிரகடனம், நிறப்பாகுபாடுகளுக்கு எதிரான உடன்படிக்கைகள் போன்றவற்றை மீறுவதாகும். வாழ்வதற்கான உரிமையின் தரம் குறித்த உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்கள், தீர்ப்புகள் மீறப்பட்டுள்ளது, இவ்விடுதிகளின் நிலைமையை பார்க்கும்போது நாம் அறியமுடிகிறது. ஐக்கிய நாடுகளின் குழந்தை உரிமைகள் மீதான உடன்படிக்கை கண்மூடித்தனமாக மீறப்பட்டுள்ளது. இவ்விடுதிகளில் உள்ள மாணவர்களுக்கு, அடிப்படைத் தரத்துடன் வாழ்வதற்கான உரிமை, சத்தணவு, சுகாதார பராமரிப்பு, கல்வி

பாதுகாப்பு, மாண்பு, பாதுகாப்பான சுற்றுச்சூழல் போன்றவை மறுக்கப்படுகிறது. 63 ஆண்டு கால சுதந்திரத்திற்கு பிறகு இந்நிலைமை தொடராமல் உடனடியாக பெரும் மாற்றத்தை கொண்டு வரவேண்டியது அரசின் அவசர பொறுப்பாகும். ஆதிதிராவிடர்களின் கல்வி தரம் என்பது குறித்து அரசிடமோ, சமூகத்திடமோ கூட தெளிவான பார்வை இல்லை. 2001 கணக்கெடுப்பின் படி மாநிலத்தில் மொத்தம் படித்தவர்களில் 73.45 சதவீதத்தில் 39.47 சதவிகிதத்தினர் ஆதிதிராவிடர்களும் 23.35 சதவிகிதம் மலைவாழ் மக்களுமே கல்வி பெற்று உள்ளனர்.

**கண்டறிந்தவைகள்**

1. அரசினர் கல்லூரி, தொழில்நுட்ப (ஆதிதிராவிட நல) விடுதிகள் வாழ்வதற்கு அடிப்படையான உணவு, நல்ல குடிநீர், சுகாதாரம், கழிப்பிட வசதிகள் கொண்ட கற்பதற்கான நல்ல சூழல் இல்லாமல் மிகவும் மோசமான நிலையில் உள்ளது. இது இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் சரத்து 21ஐ மீறுகின்ற செயலாகும். இந்த சரத்து 21ஆனது வாழ்வதற்கான உரிமையானது, பாதுகாப்பான சுற்றுச்சூழலுக்கான உரிமை, சத்தான உணவு, சுகாதாரம் மற்றும் பிற வாழ்வதற்கான வசதிகளை உள்ளடக்கியது என்று வலியுறுத்துகிறது. இந்த விடுதிகளில் மாணவர்கள் சுதந்திரமாக வாழும் உரிமையை மீறுகின்றதால், தமிழ்நாட்டு அரசின் கொள்கை மற்றும் செயல்பாடானது, இந்திய அரசியல் சாசன சட்டத்தின் மாண்புடன் மற்றும் சமத்துவத்துடன் வாழும் உரிமையை வலியுறுத்தும் சரத்து 14 மற்றும் 19 ஆகியவற்றையும் மீறுகின்றது.

2. பல்வேறு விடுதிகளில் இருந்து வந்த மாணவர்களின் வாக்குமூலங்களிலிருந்து, இன்று ஆட்சியில் இருக்கும் அரசாங்கம் உட்பட தொடர்ந்து ஆட்சியில் இருக்கின்ற அரசாங்கங்கள் இந்த விடுதிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை பயன்படுத்தாமல், போதிய நிதி ஒதுக்காமல் செயல்பட்ட மெத்தன நிலையை காணமுடிகிறது. பிற்படுத்தப்பட்ட வகுப்பை சார்ந்த மாணவர்கள் இத்தகைய மோசமான வசதிகளால் தங்களது கல்வியை சிறந்த முறையில் முடிக்க முடியாத சூழலுக்கு தள்ளப்படுகின்றனர் என்று நாங்கள் முடிவு செய்யவேண்டியுள்ளது. இந்த செயல்பாடானது சர்வ தேச உடன்படிக்கைகள், இந்திய அரசியல் சாசனம் மற்றும் எஸ்சி&எஸ்டி(வன்கொடுமை தடுப்பு) சட்டத்தை மீறுகின்ற செயலாகும். இத்தகைய பாகுபாடு, புறக்கணிப்பு மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு முதலமைச்சர் உட்பட இன்று ஆளுகின்ற அரசாங்கம் மற்றும் அதை சார்ந்த அரசாங்க துறையே பொறுப்பேற்க வேண்டும்.

3. கேரள மாநிலத்தில் நாளொன்றிற்கு ரூ.50 படி அளிக்கும்பொழுது தமிழ்நாட்டில் ரூ.18.40 மட்டுமே அளிக்கப்படுகிறது. கல்லூரி மாணவர்கள் தங்களது தேவைகளுக்காக சோப்பு, எண்ணெய் போன்ற தேவைகளுக்காக மாதம் ஒன்றிற்கு ரூ.35 மட்டுமே (நாளொன்றிற்கு ரூ.1.10) பெறுகின்றனர்.

4. தமிழ்நாட்டில் 81 ஆண்களுக்கான அரசினர் கல்லூரி, தொழில்நுட்ப (ஆதிதிராவிட நல) விடுதிகளும், பெண்களுக்கு 60 விடுதிகளும் உள்ளன. ஆண்களுக்கான விடுதிகளில் 8288 மாணவர்களும், பெண்களுக்கான விடுதியில் 4205 மாணவிகளும் இருக்கின்றனர். அநேக விடுதிகள் இன்று வரை வாடகைக் கட்டிடங்களில் செயல்படுகிறது.

5. அநேக விடுதிகளில் விளையாட்டு, நூல் நிலையங்கள், பொழுதுபோக்குகள் மற்றும் கணிணி கற்கும் வசதி போன்றவை இல்லை என்பது தெளிவாக தெரிகின்றது.

6. விடுதிகளில் உணவு அறை மற்றும் உணவு பரிமாறுவதற்கான வசதிகள் இல்லாமையால், மாணவர்கள் உணவை

| | விடுதிகள் | மாணவர்கள் | விடுதிகள் | மாணவிகள் | மொத்த விடுதிகளின் எண்ணிக்கை | மொத்த மாணவ /மாணவிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| கல்லூரி | 58 | 6527 | 53 | 3850 | 111 | 10377 |
| தொழில்நுட்ப கல்வி (ITI) | 15 | 1179 | 2 | 105 | 17 | 1284 |
| முதுநிலை கல்வி | 6 | 402 | 5 | 250 | 11 | 652 |
| தொழில் நுட்ப கல்வி | 1 | 50 | - | - | 1 | 50 |
| சட்டக் கல்வி | 1 | 50 | - | - | 1 | 50 |
| | **81** | **8208** | **60** | **4205** | **141** | **12413** |

வாளிகளில் தங்களது அறைக்கு எடுத்துச் செல்லும் கட்டாயம் உள்ளது. அபூர்வமாக விடுதி காப்பாளர் விடுதியில் இருக்கின்றார். அநேக விடுதிகளில் நூலகமும், உடற்பயிற்சி அறையும் எப்பொழுதும் பூட்டி வைக்கப்பட்டுள்ளன. விடுதியில் உணவு சமைப்பதற்கு, பரிமாறுவதற்கு, சுத்தம் செய்வதற்கு போதிய அளவிலான வேலை ஆட்கள் இல்லை. இதனால் மாணவர்கள் தங்களால் முடிந்த அளவு சிறப்பான முறையில் வைத்துக்கொள்ளும் சூழல் உள்ளது. இத்தகைய மனித நேயமற்ற செயல்பாடுகளால், மாணவ சமூகம் கல்வி கற்று விடுதலை பெறும் தளங்களாக அமையாமல், மிக மோசமான உணவு, மின்சார வசதி, சுத்தப்படுத்தப்படாத துர்நாற்றமுடைய குப்பைகள் கொண்ட விடுதிகளில் தங்கி வாழ்ந்து கற்க வேண்டிய சூழல் உள்ளது.

## பரிந்துரைகள்

**1.** அனைத்து அரசு அதிகாரிகள் மற்றும் ஆதிதிராவிட நல அமைச்சகம், அரசினர் கல்லூரி, தொழில்நுட்ப (ஆதிதிராவிட நல) விடுதிகளில் உள்ள புறக்கணிப்பு, பாகுபாடு மற்றும் மனித உரிமை மீறல்களுக்கு எஸ்சி&எஸ்டி (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989ன்படி சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

**.2.** அனைத்து அரசு அதிகாரிகள் மற்றும் ஆதிதிராவிட நல அமைச்சகம், நிதி ஒதுக்கீட்டை பயன்படுத்தாமைக்கு எஸ்சி&எஸ்டி (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 ன்படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

**3.** போதிய கட்டுமானங்கள், உணவு பரிமாறும் அறைகளில் பரிமாறப்படும் தரமான உணவு, நல்ல குடிநீர், கழிப்பிட வசதி, நூலகம், பொழுதுபோக்கு வசதி, உடற்பயிற்சி வசதி, காற்றோட்டம் கொண்ட அறைகள், அலமாரிகள், மின்சார வசதிகள் மற்றும் படுப்பதற்கான வசதிகள் போன்றவற்றை உள்ளடக்கிய விடுதிகளை அடுத்த ஆறுமாத காலத்திற்குள் தமிழ்நாடு அரசானது சொந்த கட்டிடங்களில் செயல்படுத்த வேண்டும்.

**4.** உணவை வாளிகளில் பரிமாறும் முறையானது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். மேலும் அரசாங்கம் கொடுத்துள்ள உணவு பட்டியலின் படி, சுகாதாரமாக தயாரிக்கப்பட்ட சத்தான உணவு தினமும் வழங்கப்பட வேண்டும். மாணவர்களுக்கு காலையிலும் மதியமும் அரிசியை கொண்டு சாம்பாருடன் கொடுக்கப்படும் கஞ்சியானது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

**5.** குளிப்பதற்கும் குடிப்பதற்கும் தேவையான நீரை பாதுகாப்பான தொட்டிகளில் சுத்தம் செய்து அளிக்க வேண்டும். மேலும் முதலுதவி மற்றும் மருத்துவர், மருந்தகம் உள்ளடக்கிய மருத்துவ வசதிகள் தினந்தோறும் அளிக்கப்பட வேண்டும்.

**6.** 11 விடுதிகள் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட நிதியை உடனடியாக வெளியிட்டு விடுதி கட்டிடங்கள் தொடங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதோடு, மயிலாப்பூரில் கட்டி முடிக்கப்பட்ட முதுநிலை (P.G.) விடுதிகளை தேவையான மாணவர்கள் உபயோகப்படுத்துவதற்கு திறந்து விட அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

---

## தோழமை அமைப்புகள்

Human Rights Advocacy and Research Foundation (HRF), Chennai
Campaign for Custodial Justice and Abolition of Torture (CCJAT)
Society for Integrated Rural Development (SIRD), Madurai
Social Awareness Society for Youths (SASY), Villupuram
Human Rights Development Forum (HRDF), Kancheepuram
Legal Aid to Women Trust (LAW TRUST)

# நரகக் குழியான மாணவர் விடுதிகள்

சென்னையில் உள்ள ஆதிதிராவிடர் மாணவர்கள் தங்களது விடுதிகளில் உள்ள நரகம் போன்ற நிலைமைகளை வெளி உலகிற்குக் காட்டுவதற்காக நகரத்தின் நடமாட்டத்தை நிறுத்தி வைத்தனர்.

– எஸ். துரைராஜ்

''என்ன தைரியம் ? கொஞ்சம் மாணவப்பசங்க சட்டத்தை கையில் எடுத்துக்கிட்டாங்க! அண்ணா சாலை போக்குவரத்தை ஏறக்குறைய ஐந்து மணி நேரம் தடுத்து வைச்சுருக்காங்க! தங்களோட பிரச்சனைகளை தெரிவிக்க பரபரப்பான நகரத்தின் நடமாட்டத்தை நிறுத்தி வைக்கிறார்கள்!'' நகரத்தின் முக்கியமான சாலையில் போக்குவரத்தை டிசம்பர் 21, 2010 அன்று நிறுத்தி வைத்த நூற்றுக்கணக்கான தலித் மாணவர்களின் சாலை மறியலைப் பார்த்து அன்றாடம் வேலைக்கு போகிறவர்களுக்கு ஏற்பட்ட ஆரம்ப பிரதிபலிப்பு இது தான். தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி நலத்துறையால் நடத்தப்படுகிற விடுதிகளில் அடிப்படைத் தேவைகள் செய்து தரப்பட வேண்டும் என்று மாணவர்கள் கோரியிருந்தனர்.

''முன்பின் யோசிக்காமல் துணிந்து செய்யப்பட்ட எதிர்ப்பு இயக்கத்தின்'' போது மக்களுக்கு வந்த கோபம் என்பது தலித் மாணவர்களின் மோசமான விடுதிச் சூழ்நிலைகள், மனிதத் தன்மையற்ற முறையில் அவர்கள் நடத்தப்படுவது போன்ற செய்திகள் பரவத் தொடங்கியதும் கலையத் தொடங்கியது.

தலித் மாணவர்களுக்காக அரசாங்கம் தமிழகத்தில் நடத்தும் விடுதிகள் பற்றிய விசயங்களை, இந்தக் கிளர்ச்சி முன்னுக்குக் கொண்டு வந்துள்ளது. சென்னையில் உள்ள விடுதி மாணவர்களில் பெரும்பாலானோர், சிறு விவசாயிகள், கட்டுமான வேலை செய்வோர், பண்ணை ஆட்கள், உடல் உழைப்பாளிகள் உள்ளிட்ட ஏழைக் குடும்பங்களில் இருந்து வந்துள்ள முதல் தலைமுறை மாணவர்கள்.

தொழில் ரீதியாக பின் தங்கியுள்ள வடக்கு மாவட்டங்களான விழுப்புரம், காஞ்சிபுரம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்ட கிராமங்களில் இருந்து இவர்கள் வந்துள்ளனர். தலைமுறை தலைமுறையாக கடன் வலைக்குள் மாட்டிக்கிடக்கிற தமது குடும்பங்களை மீட்க ஒரு நல்ல வேலை தங்களுக்குக் கிடைக்கும் என்ற கனவில் இவர்கள் அரசுக் கல்லூரிகள் மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் சேர்கின்றனர். ஏராளமான வேதனைகளுக்கு நடுவில் அவர்கள் வாழ்கின்றனர். விடுதிகள் அவர்களுக்கு நல்ல சூழல்களைக் தரவில்லை. உண்மையில் அவர்களது விடுதி வாழ்க்கை என்பது சங்கடங்கள் நிறைந்ததாக, மகிழ்ச்சி இல்லாததாக உள்ளது.

அவர்களது கோரிக்கைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்ட பெரும் சோர்வில், தலித் மாணவர்களுக்கு என்று கட்டப்பட்டுள்ள சென்னையில் உள்ள 17 விடுதிகளில் தங்கியிருப்போர் 50 ஆண்டுகால பழமையான எம்.சி.ராஜா விடுதி முன்பு சைதாப்பேட்டையில் கூடினார்கள். அலுவலகம் செல்லும் நேரமான காலை 9 மணி அளவில் போக்குவரத்தை முடக்கினார்கள். பலப்பிரயோகம் செய்து அவர்களை கலைக்கும் வேலையை காவல்துறை செய்து தோல்வியடைந்தது. ஏறத்தாழ 12 மணிக்குத் தான் போராடிய மாணவர்கள் போக்குவரத்துத் தடையை நீக்கினார்கள். ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் தமிழரசியும் உயர் அதிகாரிகளும் போராட்ட இடத்துக்கு வந்தனர். விடுதி மாணவர் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு உறுதி அளித்தனர். தரமான உணவு, விடுதி வளாகங்களை ஆரோக்கியமான சூழலுக்கு மேம்படுத்துதல், அடிப்படைத் தேவைகளான கழிப்பறை, நூலகம், விடுதிகளில் தங்கியுள்ள அதிகார பூர்வமற்றவர்களை வெளியேற்றல், விடுதிகளில் நடக்கும் நிதிமுறைகேடுகளை விசாரிக்க விசாரணை குழுவினை அமைக்கக் கோருதல், உள்ளிட்ட கோஷங்களை மாணவர்கள் எழுப்பினர். அதன் தொடர்ச்சியாக எம்.சி.ராஜா விடுதியை அமைச்சர் பார்வையிட்டார்.

புகழ்பெற்ற தலித் தலைவர் எம்.சி.ராஜாவின் பெயரைத்தாங்கியுள்ள, மிகப்பழைய விடுதியின் பிரச்சனைகளை புரிந்து கொள்வது ஒன்றும் பெரிய கஷ்டம் கிடையாது. போர்ட்டிகோவில் உள்ள கல்வெட்டுகள், விடுதிக்கு ஏப்ரல் 22, 1960ல் அப்போதைய முதல்வர் காமராஜரால் அடிக்கல் நாட்டப்பட்டதையும் அவரே டிசம்பர் 15, 1961ல் திறந்து வைத்ததையும் சொல்கின்றன. அடுத்தடுத்து வந்த அரசாங்கங்கள் அதை மோசமாகப் பராமரித்ததன் விளைவு இன்றைய மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. அழுகிப்போன உணவு, சிறுநீர் மற்றும் மனிதக் கழிவின் நாற்றம் விடுதி வாசலில் நுழைந்ததுமே நமது மூக்குகளைத் தாக்குகிறது. வீணான சாப்பாடு, நடமாடும் இடங்களில் கொட்டி வைக்கப்பட்டுக் கிடக்கிறது. அளவுக்கு மிஞ்சிய எண்ணிக்கை எனபது மிகப்பெரிய பிரச்சனை. அனுமதிக்கப்பட்ட 595 மாணவர்களுக்கான இடத்தில் சுமார் 1600 மாணவர்கள் மூன்று அடுக்காக உள்ள 52 அறைகளில் தங்கி உள்ளனர்.

சில மாணவர்கள் “ பிரெண்ட் லைனி பத்திரிக்கையிடம்” பேசினர். தங்களது கதையை சொல்லும் போது மிகவும் எச்சரிக்கையுடன் பேசினர். அரசியல் தொடர்போடு உள்ள குழுக்களின் கோபத்துக்கு ஆளாக அவர்கள் விரும்பவில்லை. அல்பக் கூலி கிடைக்கும் பகுதி நேர வேலைகளை சில ஏஜெண்டுக்கள் ஏற்பாடு செய்து தருகின்றனர். அவர்களையும் மாணவர்கள் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை.

“விடுதியில் தரப்படும் காய்கறிக் கூட்டு கூட இல்லாத சோறைத்தான் சாப்பிடுகிறோம். மற்ற விசயங்களுக்கு அறைகளிலேயே ஸ்டவ் வைத்து சமையல் செய்கிறோம் அல்லது அருகில் உள்ள கான்டீன்களில் போய் வாங்கி வருகிறோம்” என்கின்றனர் மாணவர்கள்.

தங்களது செலவுகளுக்காக, விசேசங்களில் உணவு பரிமாறும் சர்வர் வேலை உள்ளிட்ட பகுதி வேலைகளுக்குப் போகின்றனர். அரசியல் கட்சிகளுக்கு பலம் காட்டும் கூட்டங்களுக்கும் போகின்றனர். சில்லறை வேஷங்களுக்காக திரைப்படங்களுக்குத் துணைநடிகர் வேஷம் போடுகின்றனர். வார விடுமுறை நாட்களில் தினக்கூலியாக இந்த வகையில் ரூ100 அவர்களுக்குக் கிடைக்கிறது. இந்த வேலைகளை ஏற்பாடு செய்யும் தரகர்கள் இவர்களை வைத்து நிறைய சம்பாதிக்கின்றனர். மதுரை, திருநெல்வேலி வரை கூட திருமண விசேசங்களுக்கு சில மாணவர்கள் சென்றுள்ளனர். இந்த வேலையில் நல்ல சாப்பாடும் அவர்களுக்குக் கிடைக்கிறது. போய் வரும் செலவு தரகர்களால் செய்யப்படுகிறது.

விடுதியில் உள்ள கழிவறைகள் போதாத காரணத்தில், பக்கத்தில் உள்ள கால்நடைத்துறை காலி இடம் பயன்படுத்தப்படுகிறது என சில மாணவர்கள் குறிப்பிட்டனர். திறந்த வெளியில் தான் மாணவர்கள் குளிக்கின்ற நிலை உள்ளது.

சிந்தி, சிதறடிக்கப்பட்டுள்ள சாப்பாடு நாய்களையும், பன்றிகளையும் விடுதிக்கு உள்ளே வரவழைக்கிறது. குடிக்கவும், குளிக்கவும் விடுதிக்குள் சேமித்து வைக்கப்படும் தொட்டிகள் சுத்தம் செய்தே பல காலம் ஆகி இருப்பதால் மிகவும் அசுத்தமான நீரே பயன்படுத்த வேண்டிய நிலை உள்ளது என ஒரு மாணவர் சொன்னார். இத்தகைய ஆரோக்கியத்துக்கு எதிரான விசயங்கள் இருந்தாலும் போதுமான மருத்துவ வசதி மாணவர்களுக்கு கிடைக்காத நிலை உள்ளது. ஒரு வாரத்தில் என்ன என்ன சாப்பாடு போட வேண்டும் என்ற பட்டியலை அரசாங்கம் உருவாக்கி இருந்தாலும், அது கடைப்பிடிக்கப்படவில்லை. மூன்று வேளையும் சோறுதான் என்ற நிலை. எப்போதாவது வழக்கமான இந்த உணவு மாறி கலவை சாதம் தரப்படுகிறது. சாப்பிடுவதற்கான அறையில் உணவு பரிமாறப்படுவது இல்லை. பிளாஸ்டிக் பக்கெட்டுகளில் சமையல் அறையில் நேரடியாக போய் வாங்கிக் கொண்டு வரும் நிலை உள்ளது. சாப்பிடும் அறையும், உடற்பயிற்சிக் கருவிகள் உள்ள அறையும் பூட்டியே கிடக்கிறது. அரசியல் ரீதியாக தொடர்புகள் கொண்ட ஆயுதம் தாங்கிய குழுவினால் உண்மையான மாணவர்கள் பயந்து நடுங்குகின்றனர் என்று பெயர் சொல்லத் தயங்கிய மாணவர்கள் தெரிவித்தனர். குழு மோதல்களையும் அவர்கள் தூண்டிவிடுகின்றனர். “எந்த எதிர்ப்பு வந்தாலும் அவர்கள் அதை இரக்கமில்லாமல் அடக்குகின்றனர்” என்றனர்.

ஆடு மாடுகளைப்போல மாணவர்கள் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று மாணவர்கள் சொல்வதை ஒத்துக்கொண்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையை சேர்ந்த உயர்மட்ட அதிகாரி ஒருவர் சென்னை தலித் மாணவர் விடுதிகளில் அளவுக்கு அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் இருப்பது என்பது பெரிய பிரச்சனைதான் என்றார். “அதிகாரப்பூர்வமற்ற சிலர் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாகவும் இந்த விடுதிகளில் தங்கியுள்ளனர்” என்றார் அவர். கணக்கில் சேராத, அதிகாரப்பூர்வமற்ற முறையில் எம்.சி.ராஜா விடுதியில் தங்கியுள்ளவர்கள், உண்மையான மாணவர்களாக இருந்தவர்கள், எந்த அரசு விடுதியிலும் சேர இடம் கிடைக்காதவர்கள். படித்த, ஆனால் வேலையில்லாதவர்கள் மற்றும் பத்தாத கூலி வாங்குபவர்கள் ஆகியோர் ஆவர் என்கிறார் அவர். விடுதி அறைகளை இவர்கள் தான் பகிர்ந்து கொள்கிறார்கள். அவர்களால் தனியாக வீடுபிடித்து;த தங்க முடியாது. (தலித் மாணவர்களுக்கும், குடும்பங்களுக்கும் சென்னையிலும், பிற பெரிய நகரங்களிலும் உள்ள நிலம் படைத்தவர்கள் தங்குமிடம் தர மறுத்துவிடுகின்றனர் என்று சமூக சேவகர்கள் குறிப்பிடுகின்றனர்) இந்தச் சூழலில் 20x15 அடி அளவுள்ள அறைகளில் 30க்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்குகின்றனர்.

“வேலையில்லா திண்டாட்டம் என்பது இந்த விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் ஆட்கள் இருப்பதற்கு பிரதான காரணம் என்பதால் வெளியாட்களை அகற்றுவது என்பது சிரமமான காரியமாக உள்ளது” என்கிறார் ஆதிதிராவிடர் நலத்துறை மூத்த உயர் அதிகாரி ஒருவர். உடன் தங்கியிருப்பவர்களும் ஏழைக் குடும்பங்களை சேர்ந்த தலித்துக்களே. தங்களது படிப்பை முடித்து அவர்கள் சொந்த ஊர்களுக்கு போய் விட்டவர்கள். தங்களது பிழைப்புக்காக மீண்டும் நகரங்களுக்கு வந்துள்ளவர்கள் என்றார் அவர்.

மார்ச் 31, 2010 வரை தமிழக வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள 61.26 லட்சம் வேலை தேடுவோரில் 25 சதவீதம் பேர் தலித்கள். (அட்டவணை பார்க்க 1) 2009 மார்ச் 31 வரை 12.16 லட்சம் தலித்துகள் வேலை வாய்ப்பகங்களில் தங்களது பல்வேறு கல்வித் தகுதிகளோடு பதிவு செய்துள்ளனர்.

**வேலைவாய்ப்பகத்தின் புள்ளி விபரங்கள்**
ததமிழ்நாட்டின் வேலைவாய்ப்பகங்களின் உள்ள வேலை தேடுவோரில் உள்ள சாதி ரீதியான விபரங்கள் (31.3.2010 வரை)

| பிரிவு | மொத்தம் | பெண்கள் |
|---|---|---|
| பட்டியல் இன சாதிகள் | 15,33,260 | 6,28,741 |
| பழங்குடி மக்கள் | 21,669 | 6,639 |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள் | 13,14,820 | 6,59,343 |
| பிற்படுத்தப்பட்ட மக்கள் | 28,45,238 | 13,61,051 |
| மற்றவர்கள் | 4,83,041 | 2,61,146 |
| **மொத்தம்** | **61,98,028** | **29,16,920** |
| 2010 ஜனவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் பதிவு செய்தவர்கள் – **1,82,758** | | |
| 2010 ஜ னவரி முதல் மார்ச் வரையிலான காலாண்டில் வேலை கிடைத்தவர் – **5356** | | |

*ஆதாரம்: வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குனரகம்*

அதிகாரப்பூர்வமான விபரங்களின்படி 1 லட்சத்து 27 ஆயிரத்து 534 தலித் மாணவர்கள் 1565 விடுதிகளில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர். 1229 விடுதிகளில் 84,886 பட்டியல் இனங்களைச் சேர்ந்த ஆதிதிராவிட மாணவர்கள் பயன் அடைகின்றனர். (296 உண்டு உறைவிட பள்ளிகள் பழங்குடி மாணவர்கள் 40,608 பேருக்கு பயன் தந்து கொண்டு உள்ளன அது இல்லாமல்) 40 விடுதிகளில் பழங்குடி மாணவர்கள் 2040பேர் உள்ளனர். இது தவிர கூடுதலாக 36 அரசுசாரா நிறுவனங்கள் 5204 தலித் மாணவர்களுக்காக விடுதிகளை நடத்திக்கொண்டு உள்ளனர். சென்னையில் உள்ள தலித் மாணவர் விடுதிகளுக்கு மாறாக, கிராமப்புற விடுதிகளில் அரசு அனுமதிக்கப்பட்ட அளவுக்கும் குறைவாகவே மாணவர்கள் எண்ணிக்கை உள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்கள் நலத்துறையின் கொள்கை அறிவிப்பில், கல்லூரி மாணவர்களுக்கான உணவுத்தொகையாக ரூ 550ம், பள்ளி மாணவர்களுக்கான தொகையாக ரூ450ம் அறிவிக்கப்பட்டு உள்ளது. இது தவிர, ஒவ்வொரு கல்லூரி மாணவருக்கும் ரூ35ம், பள்ளிக்குழந்தைக்கு ரூ25ம் ஒவ்வொரு மாதமும் சோப் மற்றும் எண்ணெய் வாங்க தரப்படுவதாக அதில் உள்ளது. மாவு அரைக்கும் மிஷின்கள், வண்ணத்தொலைக்காட்சி, தண்ணீர் சுத்திகரிப்பான்கள், எல்லா விடுதிகளுக்கும் அளிக்கப்பட்டு உள்ளதாகவும், நூலக ஏற்பாடுகள் உறுதி செய்யப்பட்டு உள்ளதாகவும் அது மேலும் கூறிக்கொள்கிறது. இரண்டு வருடத்துக்கு ஒரு படுக்கை விரிப்பு தரப்படுவதாகவும் அதில் உள்ளது. ஆனால் கல்வித்துறை செயல்பாட்டாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், அரசுசாரா நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர் அமைப்புகளின் நிர்வாகிகள் சொல்கிற யதார்த்த சூழலுக்கும் கொள்கை அறிவிப்பிற்கும் இடையே நிறைய வித்தியாசம் உள்ளது.

குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய ஆணையம் நடத்திய பொதுவிசாரணையில் தலித் மாணவர் விடுதிகள் தொடர்பான பிரச்சனைகள் பேசப்பட்டது. தமிழக சட்டமன்றத்தின் புகார்கள் குழு 2010 ஜீலை மாதத்தில் தமிழகத்தில் உள்ள தலித் மாணவர் விடுதிகளை பார்வையிட்டது. அறிவிக்கப்பட்ட பல்வேறு வசதிகள் அவற்றில் இல்லை என்பதை கண்டுபிடித்தது, இது பற்றி வேதனை தெரிவித்த குழுவினர், முதன்மை பிரச்சனையாக இதனை எடுத்துக்கொண்டு அதிகாரிகள் இந்த மோசமான சூழலை சரிசெய்யும் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என ஆணையிட்டனர். ஆனாலும், கிராமப்புறத்திலும், நகர்ப்புறத்திலும் இருக்கிற விடுதிகளின் சூழ்நிலைகளை மேம்படுத்த மிகச்சிறிய அளவே முயற்சிகள் செய்யப்பட்டு உள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. டிசம்பர் 21 எதிர்ப்பிற்கு பிறகு தான் அரசாங்கம் கொஞ்சம் பராமரிப்பு வேலையை எம்.சி.ராஜா விடுதிக்கு செய்துள்ளது. மாணவர்களின் குறைகளைத் தீர்க்க ஒரு அதிகாரிகள் குழுவை அமைத்து உள்ளதாக துறையின் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்திய மாணவர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.எஸ்.கனகராஜ்சென்னை தலித் மாணவர்கள் போராட்டத்தைப் பற்றி பேசும்போது “சென்னையில் மட்டும் அல்ல. தமிழகத்தின் மற்ற பகுதி மாவட்டங்களிலும் இதே நிலை தான் என்பதைத்தான் இந்த போராட்டம் காட்டுகிறது. தலித் மாணவர் விடுதிகளில் எதுவும் நல்லதாக இல்லை”, என்றார். விண்ணப்பம் செய்துள்ள அனைத்து தகுதியுள்ள விண்ணப்பங்களுக்கும் தங்கும் வசதிகள் விடுதிகளில் செய்து தரப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். உணவுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகப்படுத்தப்பட வேண்டும். விடுதி உணவுப்பட்டியலை கறாராக கடைப்பிடிக்க வார்டன்களுக்குக் கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும். வேலை தேடுகிற மற்றும் வேலை செய்யும் தலித் வாலிபர்களுக்குத் தனியான விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரினார்.

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

31.05.2009 வரையில் வேலை கேட்டு தமிழ்நாட்டில் பதிவு செய்துள்ள தலித்–பழங்குடி மக்களின் கல்வி ரீதியான விபரங்கள்

| மெட்ரிக்கும் கீழே | பட்டியல் இன சாதிகள் | | பழ§குடி மக்கள் | |
|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண்கள் | மொத்தம் | பெண்கள் |
| | 1,88,254 | 73,799 | 3,188 | 1,183 |
| எஸ்.எஸ்.எல்.சி | 4,26,071 | 2,08,870 | 6,865 | 2,681 |
| எச்.எஸ்.சி | 3,14,632 | 1,46,793 | 5,389 | 2,191 |
| கலைப்பட்டம் | 34,892 | 15,325 | 501 | 159 |
| விஞ்ஞானபட்டம் | 34,917 | 14,544 | 465 | 130 |
| வணிகப்பட்டம் | 22,018 | 10,376 | 279 | 111 |
| ஐடிஐ –என்டிசி | 42,022 | 4,926 | 582 | 115 |
| ஐடிஐ –என்ஏசி | 20,063 | 1,350 | 251 | 34 |
| பட்டய படிப்பு | 38,272 | 13,095 | 655 | 208 |
| செகண்டரிகிரேடு பயிற்சி | 21,579 | 12,861 | 498 | 297 |
| பி.டி.அசிஸ்டென்ட் | 21,572 | 11,705 | 414 | 151 |
| போஸ்ட்கிராஜுவேட் (B.ed) | 6,249 | 2,891 | 88 | 26 |
| போஸ்ட்கிராஜுவேட் (ஆர்ட்ஸ்) | 4,596 | 1,741 | 72 | 16 |
| போஸ்ட்கிராஜுவேட் (சயின்ஸ்) | 7,448 | 3,169 | 109 | 31 |
| மருத்துவப்பட்டம் | 853 | 317 | 4 | 1 |
| பொறியியல் பட்டம் | 12,449 | 4,811 | 186 | 62 |
| விவசாய பட்டம் | 719 | 261 | 6 | 1 |
| கால்நடை மருத்துவப்பட்டம் | 168 | 34 | 4 | 0 |
| சட்டப் பட்டம் | 208 | 41 | 2 | 0 |
| **மொத்தம்** | **11,96,982** | **5,26,909** | **19,558** | **7,397** |

ஆதாரம்: வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குனரகம்

இந்திய மாணவர் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.எஸ்.கனகராஜ்சென்னை தலித் மாணவர்கள் போராட்டத்தைப் பற்றி பேசும்போது “சென்னையில் மட்டும் அல்ல. தமிழகத்தின் மற்ற பகுதி மாவட்டங்களிலும் இதே நிலை தான் என்பதைத்தான் இந்த போராட்டம் காட்டுகிறது. தலித் மாணவர் விடுதிகளில் எதுவும் நல்லதாக இல்லை”, என்றார். விண்ணப்பம் செய்துள்ள அனைத்து தகுதியுள்ள விண்ணப்பங்களுக்கும் தங்கும் வசதிகள் விடுதிகளில் செய்து தரப்படுவதை அரசு உறுதிப்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார். உணவுக்கான நிதி ஒதுக்கீடுகள் அதிகப்படுத்தப்பட வேண்டும். விடுதி உணவுப்பட்டியலை கறாராக கடைப்பிடிக்க வார்டன்களுக்குக் கட்டாயத்தை ஏற்படுத்த வேண்டும். வேலை தேடுகிற மற்றும் வேலை செய்யும் தலித் வாலிபர்களுக்குத் தனியான விடுதிகள் ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கோரினார்.

தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணமூர்த்தி மற்றும் அதன் மற்றொரு செயல்பாட்டாளர் த.நீதிராஜன் ஆகியோர் எம்.சி.ராஜா விடுதியை பார்வையிட்டுள்ளனர். தமிழக அரசு தனது பட்ஜெட்டில் பட்டியல் இன மக்களுக்கான துணைத்திட்டத்தின் வழிகாட்டல்படி 19 சதவீத பணத்தை தலித் மக்களுக்கான தொகையாக ஒதுக்கி உள்ளது. 2005ல் 567 கோடியாக இருந்த தொகை 3828 கோடியாக மாறி உள்ளது என்பதை குறிப்பிட்டுள்ள அவர்கள் தமிழக அரசு சென்னையில் உள்ள தலித் மாணவர் விடுதிகளை நவீனப்படுத்த வேண்டும். முறைகேடுகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரியுள்ளனர்.

எம்.சி.ராஜா விடுதியில் தங்கியுள்ள மாற்றுத் திறனாளிகளின் நிலை மிகப் பரிதாபமானது என்கிறார். கல்வித்துறை செயல்பாட்டாளர் எஸ்.எஸ்.ராஜகோபாலன், சத்தான உணவுகளைத் தர முடியாவிட்டாலும், தரமான முறையிலும், சுத்தமான முறையிலும் உணவு தரப்படுவதையாவது அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றார் அவர். அனைவருக்கும் கல்வி (சர்வசிக்ஷ அபியான்) திட்டத்தின் கீழும், பட்டியல் இன மக்களுக்கான துணைத்திட்டம் என தற்போதும் சிறப்புத்கூறு திட்டம் என முன்பும் அழைக்கப்பட்ட திட்டத்தின் படியும் ஒதுக்கப்படுகிற நிதிகள் இத்தகைய விடுதிகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றார் அவர். ''அரசியல் சட்டப்பிரிவு 21 ஒவ்வொரு குடிமகனின் சமத்துவம் மற்றும் கண்ணியத்தைப் பற்றி வலியுறுத்துகிறது என்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்'' என்றார் அவர்.

தமிழ்நாடு மனித உரிமை ஆணையத்திடம் சமூக ஊழியர் எ.நாராயணன் டிசம்பர் 2008ல் தலித் மாணவர்கள் பிரச்சனை பற்றிய விரிவான மனுவை அளித்துள்ளார். தலித் மாணவர் விடுதிகளின் பிரச்சனைகளை தீர்ப்பதில் அதன் தலையீட்டை கோரியுள்ளார். சமீபத்திய எம்.சி.ராஜா விடுதிப் பிரச்சனையை வெறும் சட்ட ஒழுங்கு பிரச்சனையாகப் பார்க்கக் கூடாது. தற்போது விடுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் என்பது கல்வி சம்பந்தமான செயல்பாடுகளுக்கு உகந்தது அல்ல என்று அவர் தற்போது கூறுகிறார். ''இந்த விடுதிகளில் நூலகங்கள், பொழுதுபோக்கு அறைகள் போன்ற குறைந்தபட்ச உள்கட்டுமானங்கள் கூடக் கிடையாது. விரும்பத்தகாத விசயங்களில் கவனம் சிதறிவிடாமல் அவர்களது மனம், உடல் தகுதியை மேம்படுத்திக்கொள்ள உதவும் சூழ்நிலை விடுதிகளில் இல்லை'' என்கிறார் அவர். போதுமான அளவு பாதுகாப்பும் இல்லை. ஒழுங்குபடுத்துவதைப் பற்றிய நோக்கம் ஏற்படுத்தப்படாதவர்களாக விடுதிகாப்பாளர்கள் உள்ளனர்.

இதே போன்ற உணர்வுகளைப் பிரதிபலித்த சமூக செயல்பாட்டு இயக்கத்தின் செயலாளர் பி.பி.மார்ட்டின் ''விடுதிகள் வீட்டில் இருந்து தூரமாக உள்ள நரகங்கள்'' என்கிறார். அவை தங்களது நோக்கங்களான பாதுகாப்பு அளித்தல், சத்துணவு அளித்தல், படிக்கவும், விளையாடவும் வசதி அளித்தல் – எதிலும் வெற்றிபெறவில்லை. சமூக விரோத சக்திகளுக்கான பாதுகாப்பான சொர்க்கங்களாக இவை உள்ளன. கொலைகள் கூட அங்கே நடந்துள்ளன என்றும் அவர் கூறினார். காஞ்சிபுரம் மாவட்டத்தில் அக்டோபர் மாதம் தாயாரம்மன்குளம் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் விடுதியில் நடந்த குற்றத்தை தான் அவர் மறைமுகமாக குறிப்பிட்டார்.

விடுதிக் காப்பாளர்களுக்கு விடுதியின் நோக்கம் பற்றிய உணர்வூட்டப்படுதலின் அவசியம் பற்றி குறிப்பிட்ட அவர், சில விடுதிகளில் வருகைப்பதிவேடு முறையாக பராமரிக்கப்படுவதில்லை தலித் விடுதி மாணவர்கள் விடுதி காப்பாளர்களுக்காக சிறு தொலைவு பயணங்கள் மேற்கொள்ள கட்டாயப்படுத்தப்படும் நிலை சில விடுதிகளில் உள்ளது. விடுதிக் காப்பாளருக்கு சொந்தமான ஆடு மாடுகளை மேய்க்க மாணவர்கள் பயன்படுத்தப்பட்ட சம்பவம் ஒன்று 2007ல் வெளியானது. அடிமட்டங்களில் உள்ள ஊழல்தான் மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர் விடுதிகளில் அனுமதிக்கப்பட்ட அளவை விட மாணவர்கள் குறைவாக இருப்பதற்கு இட்டுச் சென்றது. விடுதிகளில் இருந்து வெளியேறிய மாணவர்களில் பெரும்பாலானோர் பள்ளிகளில் இருந்து இடைநின்ற மாணவர்களாக மாறியுள்ளனர். மற்ற இனத்தை சேர்ந்த மாணவர்களை விட தலித் மாணவர்களிடையே பள்ளிகளை விட்டு இடையே நிற்கும் மாணவர்களின் அளவு அதிகமாக இருப்பதற்கு இது காரணம். இது அரசு அக்கறை எடுக்க வேண்டிய விசயம். 2001 மக்கள்தொகை கணக்கின்படி மாநிலத்தின் பொதுவாக படித்தவர் விகிதாச்சாரம் 73.45 சதவீதம். ஆதிதிராவிடர்களிடையே இதுவே 63.19 சதவீதம் பழங்குடி மக்களிடையே இது 41.53 சதவீதம். மாநிலத்தின் பொதுவான படித்தவர் விகிதாச்சாரத்தை விட தலித் பழங்குடி மக்களிடையேயான படித்தவர் விகிதாச்சாரம் ரொம்பவும் ஏற்ற இறக்கமாக இருப்பதை காணலாம்.

மாநில அளவில் நல்ல கண்காணிப்பு அமைப்பு இருப்பதை உறுதி செய்ய, ஆதிதிராவிடர் நல அமைப்புகளை மாவட்ட அளவில் புனரமைக்கவும் வேண்டும். நல்ல பயிற்சியளிக்கப்பட்டவர்களை விடுதி காப்பாளர்களாக நியமிக்க வேண்டும். இவையே தலித் மாணவர் விடுதிகளை சீரமைக்க உடனடியாக செய்ய வேண்டியவை என்றார் அவர். பொதுப்பள்ளிக்கான மாநில மேடை எனும் அமைப்பின் சார்பாக சென்னையில் டிசம்பர் 27ல் நடத்தப்பட்ட கருத்தரங்கில் ஆதிதிராவிடர் –பழங்குடி மக்கள் நலத்துறையால் நடத்தப்படுகிற அனைத்து பள்ளிகளும் விடுதிகளும் கல்வித்துறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் என தீர்மானம் இயற்றப்பட்டுள்ளது. கல்வியாளர்களும் அரசுசாரா அமைப்புகளும் இதையே கோரியுள்ளனர்.

யாராலும் அலட்சியம் செய்ய முடியாதபடியான ஒரு ஆரோக்கிய அடையாளம், இன்னமும் சாதி பாரபட்சமும், தீண்டாமையும் உள்ள இந்த மாநிலத்தில் உள்ளது. எல்லா ஆதிதிராவிடர் விடுதிகளிலும் சுமார் 10 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்ட இனங்களை சேர்ந்த மாணவர்களும் இணைந்து அமைதியாகவும், நல்லிணக்கத்தோடும், மனித நேயத்தோடும் பகிர்ந்து கொண்டு உள்ளனர் என்பது தான் இது. ✪

**– Frontline, January 2011**

# ரங்கேஷ் / குற்றம் சாட்டப்பட்டவர் / அரசு ஆய்வாளர் காவல்துறை 27 ஆகஸ்ட் 2010

தேதி: 27.8.2010

**கோராம்**
மாண்புமிகு நீதிபதி கே.என்.பாஷா
குற்ற. அ. எண். 991ன் 2006
ரங்கேஷ்.. குற்றம் சாட்டப்பட்டவர்
VS
அரசுத் தரப்பு காவல் ஆய்வாளர்
பல்லாவரம் காவல் நிலையம்
சென்னை

(குற்ற எண் 415 / 2003) மனுதாரர் / எதிர் மனுதாரர்

வேண்டுதல்: குற்றவியல் சட்டத்தில் தண்டிக்கப்பட வேண்டுமென்று வந்த நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தீர்ப்புக் கூறிய கூடுதல் நீதிபதி மற்றும் செசன்ஸ் நீதிபதி (விரைவு நீதி மன்றம் – I) செங்கல்பட்டு. தேதி 7.11.2006 Sc No.317 / 2005 தண்டிக்கபட்டவர் சார்பாக திருமிகு R. விஜயகுமார்.

எதிர்மனுதாரக்கு: திரு.எஸ்.செந்தில்முருகன், திரு.J.C. துரைராஜ், CA

**தீர்ப்பு:–**

''உலகின் மிகச் சிறந்த வளம் என்பது குழந்தைகள் தான் அவர்கள் தான் எதிர்காலத்தின் மிகச் சிறந்த நம்பிக்கையுமாகும்''. (அமெரிக்காவின் 35வது ஜனாதிபதி)

''குழந்தையை தவறாகப் பயன்படுத்தினால் அதன் இருள் வாழ்நாள் முழுவதும் நீடிக்கும்'' ஹெர்பர்ட் வார்டு குற்றஞ்சாட்டப்பட்டவர் ஒரு பள்ளியின் உடற்பயிற்சி ஆசிரியர் அவர் குற்றப்பிரிவு 376 (2) (f)ன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டு விசாரிக்கப்பட்டு 10 வருடக்கடுங்காவல் தண்டணையும் ரூ.5000/– பணமும் கட்டவும் கட்டத் தவறினால் மேலும் ஒரு வருடக்கடுங் காவல் தண்டணை பெற்றார். 9 வயதுப் பள்ளிக் குழந்தையை பாலியல் பலாத்காரத்திற்குட்படுத்தியதற்காக தண்டனை பெற்றவர். இதில் அவர் கேட்பது என்னவென்றால்: தீர்ப்பு கூறிய கூடுதல் மாவட்ட மற்றும் செசன்ஸ் (விரைவு நீதிமன்றம்) நீதி மன்றம், செங்கல்பட்டு தீர்ப்பின் சட்டப்படி உள்ள நிலை அறிய வேண்டி 7.11.2006ல் SC.No. 317/2005

2. வழக்கு விபரம் சுருக்கமாக கீழே தரப்படுகிறது.

2.1. குற்றஞ்சாட்டப்பட்டவர் சென்னையிலுள்ள பள்ளி ஒன்றில் உடற்பயிற்சி ஆசிரியராகப் பணி செய்கிறார். முக்கிய சாட்சி1, 9 வயதான பெண் குழந்தை அதே பள்ளியில் 4ம் வகுப்பு படித்துக் கொண்டிருக்கிறது.

2.2. 17.6.2003ம் தேதியன்று குற்றஞ்சாட்டப்பட்டவர் பள்ளி விளையாட்டு மைதானத்தில் உடற் பயிற்சி வகுப்பு நடத்தினார். மாணவ மாணவிகள் பங்கெடுத்தனர். அப்போது மைதானத்திலிருந்து முக்கிய சாட்சி 1 ஐ தனியாக அழைத்துச் சென்று கழிப்பறையில் தண்ணீர் வருகிறதா என்று பார்க்கச் சொல்கிறார், அதன்பின் அக்குழந்தையின் உடைகளை அவிழ்க்கச் செய்து பாலியல் பலாத்காரம் செய்கிறார். முக்கிய சாட்சி 1 மூச்சுவிட சிரமப்பட்டு தண்ணீர் கேட்கிறார். குற்றஞ்சாட்டப்பட்ட கழிப்பறையிலிருந்த தண்ணீரைபிடித்துக் கொடுத்து குழந்தையும் குடித்துவிட்டது. நடந்தவற்றை யாரிடமும் சொல்லக்கூடாது என்றும் மீறிச் சொன்னால் அவளின் அப்பா, அம்மாவை கொலை செய்து விடுவதாகவும் மிரட்டுகிறார். அந்த பயத்தில் முக்கிய சாட்சி 1 இதை யாரிடமும் சொல்லவில்லை. தன் வீட்டுக்கு 4 மணிக்குத் திரும்புகிறாள். ஒருவித அவஸ்தையினால் அவள் மருத்துவரிடம் எடுத்துச் செல்லப்படுகிறாள். தான் சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல் உள்ளதாக முக்கிய சாட்சி 1 சொல்கிறாள். முக்கிய சாட்சி 8 ஆகிய மருத்துவரும் அவளுக்கு கிருமித் தொற்று இருக்கலாம் என்று நினைத்து சில நுண்ணுயிர்க் கொல்லி (antibiotic) மருந்துகளைக் கொடுத்து வீட்டிற்கு அனுப்பி விடுகிறார்.

2.3. மீண்டும் முக்கிய சாட்சி 1 குற்றம் சாட்டப்பட்டவரினால் உடற்பயிற்சி வகுப்பின்போது 2.7.2003 தேதி அன்று மைதானத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டு பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்படுகிறாள், அவள் நோயுற்று விடுவதன் காரணமாக 6.7.2003 அன்று மருத்துவரிடம், அதாவது முக்கிய சாட்சி 8. இடம் அழைத்துச் செல்லப்படுகிறாள். பரிசோதித்த மருத்துவர் முக்கிய சாட்சி 8 இடம் தன்னுடைய பிறப்பு உறுப்பில் வலி இருப்பதாக கூறகிறாள். மருத்துவர் பிறப்பு உறுப்பில் வீக்கம் இருப்பதையும் கிருமி தொற்று பூஞ்சைக்காளான் போன்று இருப்பதையும் கண்டுபிடிக்கிறார், விசாரித்ததில் முக்கிய சாட்சி 1 முக்கிய சாட்சி 8 இடம் தான் உடற்பயிற்சி ஆசிரியர் / குற்றம் சாட்டப்பட்டவரால் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதை கூறுகிறாள். 6.7.2003 தேதியன்று முக்கிய சாட்சி 1, முக்கிய சாட்சி 2 இடம் அதாவது அவளுடைய அப்பாவிடம் 2.7.2003 அன்று நடந்த பாலியல் பலாத்காரம் பற்றியும் குற்றம் சாட்டப்பட்டவரின் பயமுறுத்தல் பற்றியும் கூறுகிறாள்.

2.4. முக்கிய சாட்சி 2 பல்லாவரம் காவல் நிலையத்திற்கு 7.7.2003 அன்று சென்று ஒரு புகார் அளிக்கிறார். முக்கிய சாட்சி 9, காவல் துறை ஆய்வாளர் ஒரு வழக்கு பதிவு செய்கிறார். இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 376ன் கீழ் வழக்கு என் 415/2003ன் கீழ் பதிவு செய்யப்படுகிறது. Ex.P11 முதல் தகவல் அறிக்கை.

2.5. முக்கிய சாட்சி 9 சம்பவம் நடந்த இடத்திற்குச் சென்று பார்த்து பார்வை மகஜரை தயாரிக்கிறார். முக்கிய சாட்சி 5,7 லின் முன்னிலையில் தயாரிக்கப்பட்ட மகஜரை வைத்து சுமாராக ஒரு வரைபடம் ஒன்றை தயாரிக்கிறார். முக்கிய சாட்சி 1 முதல் முக்கிய சாட்சி 4 வரை ஒவ்வொருவரையும் விசாரித்தார். மேலும் நீதி மன்றத்திடம் முக்கிய சாட்சி 1 ஐ மருத்துவ பரிசோதனைக்கு அனுப்புமாறு நீதி மன்றத்திடம் கேட்டுக்கொள்கிறார். அதே நாளில் குற்றம் சாட்டப்பட்ட வரை பள்ளியிலேயே கைது செய்து நீதி மன்றத்திற்கு அழைத்து வந்து நீதி மன்ற விசாரணைக்காக காவலில் வைக்க நீதி மன்றத்தில் கூறுகிறார். அவரே குற்றம்சாட்டப்பட்டவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பகோருகிறார். நீதிமன்ற உத்தரவின்படி பாதிக்கப்பட்ட வரையும், குற்றம்சாட்டப்பட்டவரையும் மருத்துவப் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கிறார், மருத்துவர் முக்கிய சாட்சி 8 ஐயும் விசாரிக்கிறார்.

2.6. முக்கிய சாட்சி6 மருத்துவர் சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவரான இவர் முக்கிய சாட்சி6 முக்கிய சாட்சி 1 ஐ 10.7.2003 அன்று பரிசோதிக்கிறார். மருத்துவப் பரிசோதனையில் முக்கிய சாட்சி.6 பாதிக்கப்பட்ட நபர் மிதமான அளவில் ஊட்டமளிக்கப்பட்டிருப்பதையும் 2 ஆம் தர பாலியல் பலாத்கார சிறப்பு இயல்புகள் இல்லாமல் இருப்பதையும் அறிகிறார் கீழ்க்கண்ட காயங்கள் பாதிக்கப்பட்ட பெண்ணின் பிறப்பு உறுப்புகளில் உள்ளது என்பதை கண்டறிகிறார்.

- பெண்ணின் கருவாய் சாதாரணமாக உள்ளது
- பிறப்பு உறுப்பு துவாரம் – விரல் நுனி செல்லக்கூடியதாய் இருக்கிறது.
- துவாரத்தைச் சுற்றி சிவந்து கன்றிப்போன காயம் தென்படுகிறது.
- பெண்குறியின் நுழைவாயின் முகப்பில் உள்ள மெல்லிய சவ்வு இடது புறமும் வலுதுபுறமும் காயம் பட்டிருக்கிறது.
- பிறப்பு உறுப்புத்துவாரம் கிழிக்கப்பட்டு புண்ணாகி சளி போன்ற திரவம் தென்படுதல்
- < * 1/8 செ.மீ இடது பக்கம்
- பெண்குறி நுழைவாயில் .... கிழிந்தது பாதி ஆறி இருக்கிறது. 9 மணி காட்டும் கடிகார முள்போல காயம் உள்ளது
- வீக்கமாயும் தொடும்போது வலி மிகுந்தும் இருக்கிறது.
- மலத்துவாரத்திற்கும் பெண் குறிக்கும் இடைப்பட்ட பரப்பு காயம் படவில்லை
- கருப்பையின் கழுத்து நுனி சாதரணமாக இருக்கிறது
- போர்செட்டி சாதாரணமாக உள்ளது.

இவ்வாறாக மருத்துவப் பரிசோதனை சான்று முக்கிய சாட்சி–6ல் அளிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட பெண்ணின் வயது 9க்குமேல் என்றும் 11க்கு கீழ் என்றும் சான்று தரப்படுகிறது.

2.7. முக்கிய சாட்சி 7, சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையோடு இணைந்துள்ள மருத்துவர் குற்றம் சாட்டப்பட்டவரை 10.7.2003 அன்று பரிசோதிக்கிறார். பரிசோதித்ததின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர் ஆண்மை அற்றவர் என்று சொல்லுவதற்கு ஏதும் இல்லை என்று சான்றளிக்கிறார்.

2.8. முக்கிய சாட்சி 9, ஆகிய காவல் துறை ஆய்வாளர் மருத்துவர்களை முக்கிய சாட்சி 6 முதல் முக்கிய சாட்சி 8 வரை விசாரிக்கிறார். அவர்களிடமிருந்து பரிசோதனை அறிக்கை P5, P6 மற்றும் P10 பெறுகிறார். கவனமான புலன் விசாரணைக்குப் பின்பு காவல் ஆய்வாளர் குற்றம் சாட்டப்பட்டவரின் மீது 17.9.2003 அன்று இந்திய தண்டனைச் சட்டத்தின்படி பிரிவு 376(2) கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்கிறார்.

3. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக அரசு தரப்பில் வழக்குத் தொடுக்கும் வழக்கறிஞர் முக்கிய சாட்சி 1 முதல் முக்கிய சாட்சி 9 வரை விசாரித்து P1 முதல் P12 வரை அறிக்கை பதிவு செய்கிறார்.

4. குற்றம் சாட்டப்பட்டவரை குற்ற நடவடிக்கை இயலின் பிரிவு 313 கீழ் விசாரிக்கும் போது அரசு வழக்கறிஞர் தரப்பில் கூறுப்பட்ட சாட்சியங்கள் அனைத்தையும் ஒட்டுமொத்தமாக மறுக்கிறார். குற்றம் சாட்டப்பட்டவரின் சார்பாக வந்த வழக்கறிஞர் முக்கிய சாட்சி1 மற்றும் முக்கிய சாட்சி2ஐ விசாரிக்கிறார்.

5. நீதிமன்றத்தின் தீர்ப்பினை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் மேல் முறையீடு செய்பவராகிய திரு.ஆர்.விஜயக்குமார் அரசுத் தரப்பில் குற்றம் சரியான முறையில் நிருபிக்கப்படவில்லை என்று கூறி குற்றம் சாட்டப்பட்டவரின் மேல் தண்டனை அளித்துவந்த தீர்ப்பை சவால் விட்டு, கீழ்கண்ட விவாதத்தை முன்வைக்கிறார்.

(i) காவல் நிலையத்தில் புகார் அளிக்க தாமதத்திற்கான காரணம் சொல்லப்படவில்லை

(ii) முக்கிய சாட்சி 1 முதல் முக்கிய சாட்சி 4 வரை சொல்லப்பட்ட விவரங்களில் முரண்பாடு இருக்கிறது.

(iii) மருத்துவர் முக்கிய சாட்சி8 கூறியதில் முக்கிய சாட்சி 1 பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டதாகச் சொல்லவில்லை. மேலும் மருத்துவர் கூறும்போது முக்கிய சாட்சி 1 பூஞ்சைக்காளான் போன்ற கிருமித்தொற்று இருப்பதாக கூறி இருப்பது, வேறுசில காரணங்களாலும் இருக்கலாம்.

(iv) முக்கிய சாட்சி 1 கூறியது நம்பக்கூடியதாக இல்லை ஏனென்றால் மைதானத்தில் அத்தனை மாணவர்கள் இருக்கும் போது அவளை மட்டும் தனியாக கழிப்பறைக்கு கூட்டிச் செல்வது சாத்தியம் இல்லை.

(v) சம்பவத்திற்கு பின்பு பாதிக்கப்பட்டவரின் தோற்றம் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டதாக தெரியவில்லை.

(vi) முக்கிய சாட்சி 6 ஆகிய மருத்துவர் சம்பவம் நடந்து ஐந்து நாட்களுக்குப் பின்பு பாதிக்கப்பட்டவரை பரிசோதித்ததினால் அவருடைய சாட்சியம் நம்பமுடியாததாக இருக்கிறது. அதைவிட முக்கிய சாட்சி8 பாதிக்கப்பட்டவரை உடனே பரிசோதித்திருக்கிறார்.

(vii) முக்கிய சாட்சி.2 சாட்சியங்கள் மாறுபாடு மற்றும் அறிக்கை Ex.1ல் மாறுபாடுகள் இருக்கிறது.

(viii) மருத்துவர் DW2 –படி சாட்சியம் முக்கிய சாட்சி 1ன் காயங்கள் பாலியல் பலாத்காரத்தினால் வந்தது என்று சொல்லவில்லை. அரசுத் தரப்பு வழக்கறிஞர் கூறுவது போலவே இருந்தாலும் குழந்தையானது (முக்கிய சாட்சி.1) குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்காக திரித்துக்கூட சொல்லி இருக்கலாம். எனவே தண்டிக்கப்பட்டவர் L.L.M வரை படித்துள்ளார். அவர் சார்பாக பேசும் வழக்கறிஞர் தண்டணையை குறைக்குமாறு கேட்டுக் கொள்கிறார் இது பாலியல் பலாத்கார வழக்காக கருத முடியாது. பெண்ணை அவமதித்த வழக்காகக் கருதிட (இது குழந்தை என்பதனால்) தண்டணையை குறைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறார்!

6. திருமிகு.எஸ்.செந்தில் முருகன் அரசு வழக்கறிஞர் (குற்ற இயல் சார்பு) திருமிகு.ஜே.சி.துரைராஜ்சார்பாக கூறும் போது அரசு தரப்பு வழக்கறிஞர் வழக்கை தெளிவாகவும் அடுத்தடுத்து சாட்சியங்கள் முக்கிய சாட்சி1 முதல் முக்கிய சாட்சி 4 வரை ஒன்றன் பின் ஒன்றாகவும் சமர்ப்பித்துவிட்டார். முக்கிய சாட்சி1 முதல் முக்கிய சாட்சி 4 வரை சொன்ன சாட்சியங்களை மருத்துவர்கள் தங்கள் சாட்சியங்களின் மூலமாக அளித்த அறிக்கை காயங்கள் பற்றிய அறிக்கையும் முக்கிய சாட்சி.1. கூறியதோடு ஒத்துபோவது தெரிகிறது. பாதிக்கப்பட்டவர் 9 வயது மட்டுமே ஆன சிறிய குழந்தை என்பதால் பாலியல் பலாத்காரம் செய்யவிடாமல் போராடிட வாய்ப்பு இல்லை என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்டவரினால் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டதால் (முக்கிய சாட்சி1) உடனே தம் பெற்றோரிடம் கூறவில்லை எனவே அரசுத் தரப்பில் வழக்கு மிகச்சரியாக குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக நிருபிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்.

7. நான் என்னுடைய ஜாக்கிரதையான மற்றும் தீவிரமான கவனத்துடன் இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்து எல்லா சாட்சியங்களிலும் புகுந்து பார்த்து எல்லா அறிக்கைகளையும் ஆழ்ந்தறிந்து சவாலுக்கு உள்ளான தீர்ப்பை மேற்சொன்னவைகளின் அடிப்படையில் ஆராய்ந்தேன்.

8. அரசு தரப்பு முக்கிய சாட்சி 1 மற்றும் அவள் அப்பா முக்கிய சாட்சி 2 இருவரின் சாட்சியங்களின் மேல் வழக்கு கட்டப்பட்டிருக்கிறது. சாட்சியங்களுக்கு இணையாக மருத்துவர்கள் முக்கிய சாட்சி 6 முதல் முக்கிய சாட்சி 8 வரையான மருத்துவச் சான்றிதழ்களை சாட்சியங்களாக இணைக்கப்பட்டிருக்கிறது, வழக்கிலுள்ள குழந்தை சம்பவம் நடந்தபோது 9 வயதாகவும், 4வது படித்துக்கொண்டும் இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்டவர் அதே பள்ளியில் உடற்பயிற்சி ஆசிரியராக பணியாற்றினார். சம்பவம் பற்றி சொல்லும் பொழுது உடற்பயிற்சி வகுப்பு மைதானத்தில் நடைபெற்றபோது அவளை தனியாக குற்றம் சாட்டப்பட்டவர் கழிப்பறைக்கு அழைத்துச் சென்று அங்கே பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தினார்.

9. குற்றம் சாட்டுபவர்களின் சாட்சியங்களான முக்கிய சாட்சி 1 மற்றும் அவள் அப்பா முக்கிய சாட்சி 2 இவர்களின் சாட்சியங்கள் மற்றும் மருத்துவர்களின் சாட்சியங்களான பரிசோதனை அறிக்கை மற்றும் அவர்களின் நம்பகத்தன்மை போன்றவற்றை தொகுத்து, பகுத்து அறிந்து மதிப்பீடு செய்யும் முன்பாக மதிப்பிற்குரிய உச்சநீதிமன்றம் ஏற்கனவே வகுத்துள்ள கொள்கைகளின் அடிப்படையில் வழக்கு தொடுப்பவர்களின் சாட்சியங்களை மேற்கோள்காட்டிப் பார்க்க வேண்டி இருக்கிறது.

10. மதிப்பிற்குரிய உச்ச நீதி மன்றம் <u>சுதன்சு சேகர் சாகு vs ஒரிசா மாநிலம்</u> அரசு வழக்கில் வந்த அறிக்கை AIR 203 SC 2136 ல் கண்டுள்ளவாறு வழக்குத் தொடுப்பவர் தன் வாக்குமூலத்தின் மூலம் கோர்ட்டார் அவர்களை (நீதிபதி அவர்களை) நம்பிக்கை கொள்ளவைக்க முடியுமென்றால் குற்றம் சாட்டப்பட்டவரை தண்டிப்பதற்கு அது ஒன்றையே அடிப்படையாக வைத்து கொள்ளலாம்.

11. மதிப்பிற்குரிய உச்ச நீதிமன்றம் <u>புபிந்தர்சர்மா Vs இமாசல பிரதேச அரச வழக்கில்</u> அறிக்கை AIR 203 SC 4684 கீழ்கண்டவாறு கூறுகிறது: பாதிக்கப்பட்ட நபர் கூறுவதை ஏற்றுக்கொள்ள ஒப்புகைச்சாட்சியங்கள் மிக அரிதிலும் அரிதான ஒருசிலவற்றையே பார்க்க வேண்டும். தன் சிற்றின்ப இச்சையை தீர்க்க மற்றவரை பயன்படுத்தும் குற்றம் என்பது பெண்மையை அவமானப்படுத்துவது ஆகும். அவமானப்படுத்துவதோடு காயப்படுத்துவதும் ஆகும்...

12. <u>மத்திய பிரதேச அரசு Vs தயாள்சாகு</u> வழக்கில் அறிக்கை 2005 CRI.L.J 4375 ல் மதிப்பிற்குரிய உச்சநீதி மன்றம் சொல்வது என்னவென்றால் வழக்குத் தொடுப்பவர் நீதிபதி அவர்களின் நம்பிக்கையையும் ஒப்புகையையும் பெறும் அளவிற்கு வாக்குமூலம் இருக்கும் என்றால் அந்த ஒன்றின் அடிப்படையிலேயே குற்றம் சாட்டப்பட்டவருக்கு அவளுடைய தண்டனை வழங்கலாம். மேலும், வேறு வகையான ஒப்புகைச் சாட்சியங்கள் தேவைப்பட்டால் ஒழிய ஒப்புகை சாட்சியங்கள் சட்டத்திற்கு அடிப்படைத் தேவை இல்லை ஆனால் சொன்ன விஷயங்களுக்கு சார்பாகவும் சூழ்நிலைக்கு ஏற்பவும் பெறப்பட்டிருக்கலாம். மருத்துவர் பரிசோதிக்கவில்லை என்பதற்காகவோ மருத்துவர் அறிக்கை சமர்பிக்கப்படாததோ வழக்கை தீர்மானிக்காது, வழக்குதொடுப்பவரின் வாக்கு மூலம் அவர்சார்ந்த மற்ற சாட்சிகளும் நீதிபதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருக்கும் பட்சத்தில்.'' என்று கூறப்பட்டுள்ளது.

13. மேலும் ஒரு மதிப்பிற்குரிய உச்சநீதிமன்ற வழக்கில் <u>மகா ராஷ்டிர அரசு Vs சந்திர பிரகாஷ் கேவல்சந்தன்</u> வழக்கில் காவல்துறை உதவி ஆய்வாளராக இருக்கின்ற திரு. சந்திரபிரகாஷ் கேவல்சந்ஜெயின் AIR 1990 SC 658 படி பாலியல் சம்பந்தப்பட்ட குற்றத்தில் குற்றம் சாட்பவரை தீய வழக்கில் உடைந்தையாக இருப்பவராகக் கருதமுடியாது. இந்த குற்றத்தில் பாதிக்கப்பட்டவளே அவள்தான். சாட்சியங்கள் சட்டம் எந்த இடத்திலும் அவருடைய சாட்சியத்தை ஒப்புக் கொள்ளக் கூடாது என்றும் மற்ற சாட்சியங்கள் இணைந்து போனால் தான் ஒப்புக்கொள்ள வேண்டும் என்று சொல்லவில்லை, உடல்ரீதியான அடிப்பட்ட வன்முறை வழக்கில் அந்த காயம் அந்த வன்முறை எப்படி சாட்சியாகுமோ அதேபோல அவளுடைய சாட்சியமும் பிரிவு 118 – ன் படி சந்தேகத்திற்கு இடமில்லாதாக சாட்சியத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்ன விஷயம் அவசியமாக கருதப்பட வேண்டும் என்றால் ஒரு நபர் சாட்சியம் கூறும் போது வாக்குமூலம் சொல்வதை எப்படி ஏற்றுக்கொள்கிறார், என்பதும் குற்றம்

சாட்டப்பட்டவரின் விளைவாக என்னதண்டனை தரலாம் எனக்கருதுகிறா் என்பதைப் பொறுத்தது. நீதிபதி இதை கவனத்தில் கொண்டு குற்றம் சாட்டுபவரின் சாட்சியத்தின் மேல் திருப்தி அடைந்தால் வேறு ஒரு இணை சாட்சி தேவை இல்லை. இந்திய சாட்சிய சட்டத்தின் 114வது பிரிவின் படி ..... இப்படிச் சொல்லிச் செல்கிறது அந்த அறிக்கையானது.

14. குற்றம் சாட்டிய முக்கிய சாட்சி 1 கூறிய சாட்சியங்கள் யாவையும் மேற்சொன்ன உச்சநீதி மன்ற தீர்ப்பு கொள்கையின் அடிப்படையில் பகுத்தறிந்து முடிவுக்கு வருகிறேன்.

15. பரிசோதனை அறிக்கை P W1 சொல்வதின்படி முக்கிய சாட்சி 1 2.7.2003 ஆம் தேதிக்கு முன்னரே ஒரு முறை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டிருக்கிறார். அதாவது 17.6.2003 தேதியன்று. அந்த அறிக்கை முக்கிய சாட்சி.2 குற்றஞ்சாட்டப்பட்டவரின் தந்தையால் சமர்ப்பிக்கப்படுகிறது. சம்பவம் நடந்த 2.7.2003 ஆம் தேதியன்று முக்கிய சாட்சி 1 சம்பவத்தைப்பற்றி தெளிவாகவும் ஒரே மாதிரியாகவும் கூறுகிறார். முக்கிய சாட்சி1 நீதிபதிக்கு முன்பாக பாலியல் பலாத்காரத்தைப்பற்றியே கூறுகிறார். பலாத்காரம் முடிந்தபின் அதை யாரிடம் கூறினாலும் தந்தையையும் தாயையும் கொன்று விடுவேன் என்று மிரட்டப்பட்டதாக கூறுகிறார் குற்றம்சாட்டப்பட்டவர் மிரட்டலுக்கு பயந்து போன முக்கிய சாட்சி1 உடனே இதையாரிடமும் கூறவில்லை. ஆனால் வீட்டிற்குத் திரும்பியதும் அவள் பட்ட அவஸ்தையினாலும் நோய் வாய்பட்டதையும் பார்த்து அவளுடைய தந்தை மருத்துவரிடம் அழைத்துச் செல்கிறார். சம்பவம் நடந்த அன்றைய நிகழ்வுகளை முக்கிய சாட்சி சொல்லியதும் மிக இயல்பாக இருக்கிறது. இந்த நீதி மன்றம் முக்கிய சாட்சி சொல்லியதை எந்த தயக்கமும் இன்றி நம்புகிறது.

16. முக்கிய சாட்சி 1 கூறிய சாட்சியங்களோடு முக்கிய சாட்சி 2 ஆகிய அவளுடைய தந்தையின் சாட்சியமும் ஒத்துப் போகிறது. முக்கிய சாட்சி 2 கூறுவதன் படி 17.6.2003 அன்று முக்கிய சாட்சி 1 நோயுற்று இருந்ததால் மருத்துவமனைக்கு அழைத்து செல்லப்பட்டார் அழைத்து வரப்பட்டதாகவும் கூறி முக்கிய சாட்சி 8 சொன்னதின் படி 17.6.2003 அன்று முக்கிய சாட்சி.1. அழைத்து வரப்பட்டதாகவும், தனக்கு சிறுநீர் கழிக்கும் பொழுது எரிச்சல் உணர்வு இருப்பதாகவும் சில நுண்ணுயிர்க் கொல்லி மருந்துகளை கொடுத்து அனுப்புகிறார். மீண்டும் முக்கிய சாட்சி 1 சம்பவம் நடந்த அன்று முக்கிய சாட்சி 8 இடம் அழைத்து செல்லப்பட்டு அன்றுதான் முக்கிய சாட்சி1 மருத்துவரிடமும் தன் தந்தையிடமும் தன் மீது நடந்த பாலியல் பலாத்காரத்தை முதல் முறையாகக் கூறுகிறாள். முக்கிய சாட்சி 8 அதாவது மருத்துவர் அவர்கள் இருவரிடமும் முக்கிய சாட்சி.1 யை அரசு மருத்துவமனைக்கு அழைத்துப் போகுமாறு அறிவுறுத்துகிறார். முக்கிய சாட்சி1 கூறுவதும் முக்கிய சாட்சி3, முக்கிய சாட்சி 4 அதாவது அவளுடைய சகோதரி மற்றும் அவளுடைய வீட்டுக்கார அம்மா கூறுவதும் முக்கிய சாட்சி1 முக்கிய சாட்சி2 கூறுவதும் எல்லாமும் ஒத்துப் போவதாகவே முரண்பாடில்லாமல் இணங்கிப் போகிறது.

17. வழக்குத் தொடுத்த அரசு வழக்கறிஞர் முக்கிய சாட்சி 6 ஆகிய சென்னை மருத்துவ கல்லூரி மருத்துவர் முக்கிய சாட்சி 1 ஆகிய வழக்கு தொடுத்தவரை பரிசோதிக்கிறார். மருத்துவமனையின் மருத்துவரையும் விசாரிக்கிறார் இவர் 10.7.2003 தேதியன்றே பரிசோதனை அறிக்கையில் பாலியல் குற்றம் நடந்திருப்பதாக சான்று கூறுகிறது. இந்தப் பரிசோதனை குற்றம் நடந்திருப்பதற்கான சான்றாக காயங்கள் முக்கிய சாட்சி1 க்கு இருப்பதைக் கூறுகிறது.

– பெண்ணின் பிறப்பு உறுப்பு துவாரம் விரல் நுனி செல்லக்கூடியதாக இருக்கிறது.
– துவாரத்தைச் சுற்றி சிவந்த கன்னிப்போனகாயம் தென்படுகிறது
– பெண் குறியின் நுழைவாயின் முகப்பிலுள்ள மெல்லிய சவ்வு இடது புறமும் வலது புறமும்காயம் பட்டிருக்கிறது.
– பிறப்பு உறுப்பு துவாரம் கிழிக்கப்பட்டு புண்ணாகி சளிபோன்ற திரவம் தென்படுகிறது
– < * 1/8 செமீ இடது பக்கம்
– பெண் குறி நுழை வாயில்............கிழிந்தது பாதி ஆறி இருக்கிறது 9 மணி காட்டும் கடிகார முள் போன்ற வடிவத்தில் காய பட்டிருக்கிறது.
– வீக்கமாகவும் தொடும் போது மிகுந்த வலியும் இருக்கிறது.

மேற்சொன்ன காயங்கள் தெளிவாகவும் கருவாயின் மெல்லிய சவ்வு கிழிக்கப்பட்டு பாதி புண் அறி இருப்பதும் வீக்கம் தென்படுவதும் தெரிகிறது. இதுபற்றி முக்கிய சாட்சி 6 தெளிவாக கூறுகிறார். முக்கிய சாட்சி 1 பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப் பட்டிருப்பதை சொல்லுகிறார்.

18. மதிப்பிற்குரிய உச்சநீதி மன்றம் தன் தீர்ப்பு ஒன்றில் தெளிவாக கூறுகின்றது வழக்குத் தொடுப்பவரின் வாக்கு மூலத்தில் நம்பிக்கை இருக்குமானால் மருத்துவசான்று இல்லாமலேயே அப்படியே ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறுகிறது. ஆனால் இந்த வழக்கில் எற்கனவே குறிப்பிட்டபடி முக்கிய சாட்சி 1 கூறுவது நீதி மன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டாலும் அவருடைய வாக்கு மூலத்திற்கு ஒத்து போகின்ற வகையில் சாட்சியங்கள் அறிக்கை முக்கிய சாட்சி 2 முதல் முக்கிய சாட்சி 4 வரை இருப்பதோடு மருத்துவர்களின் முக்கிய சாட்சி 6, முக்கிய சாட்சி 8 அறிக்கை ஒத்துப் போகிறது.

19. தண்டிக்கப்பட்டவரின் சார்பாக பேசிய வழக்கறிஞர் முக்கிய சாட்சி 1ன் மீது பாலியல் வன்முறை ஆண் குறி மூலம் நடத்தியதாக அன்று குற்றம் சாட்டபட்டவர் விரல்களின் மூலம் நடத்திருக்கலாம் இதையே மருத்துவ அறிக்கையின் பிறப்பு உறுப்பு துவாரத்தில் விரல் நுழையக்கூடிய அளவிற்கு இருப்பதாக கூறியதாலும் கௌரவ குறைவாக நடந்து கொண்டதாக இதை ஏற்றுக் கொண்டு தண்டனையை குறைக்குமாறு கேட்டுக் கொண்டிருக்கிறார், ஆனால் இந்த நீதிமன்றம் அவரின் வாதத்தை அவர் கூறக்கூடிய மருத்துவ சான்றை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் அதே சான்று பிறப்பு உறுப்பில் கிழிதல் இருப்பதையும் கூறுகிறது. தெளிவாக வாதம் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை.

20. இந்த இடத்தில் மதிப்பிற்குரிய உச்ச நீதிமன்றத் தீர்ப்பை கவனத்தில் கொள்ள வேண்டும். அமன் குமார் மற்றும் பிறிதொருவர் Vs ஹரியான மாநிலம் அறிக்கை 2004 SCC (Cri) 1266 கூறுவது என்னவென்றால் மெல்லிய சவ்வு கிழியாமல் இருந்தாலும் பிறப்பு உறுப்பு துவாரத்தில் சிறிது அளவே ஆண்குறி நுழைந்தாலும் அது பாலியல் குற்றம் எனபடும் பெண் உறுப்பில் வன்முறையுடன் கூடிய அல்லது வன்முறை அல்லாத நுழைவும் பாலியல் வன்முறைதான் இந்த வழக்கில் மேற்சொன்ன விதியின் அடிப்படையில் பார்க்கும்போது வழக்குத் தொடுத்த வழக்கறிஞர் மிகத் தெளிவாக எந்த வித சந்தேகத்திற்கும் இடமில்லாமல் பாலியல் பலாத்கார வன்முறை குற்றம் மிக கொடிய முறையில் சிறு குழந்தையின் மீது நடத்தப்பட்டிருப்பதை நிரூபித்து இருக்கிறார்.

21. தண்டிக்கப்பட்டவர்க்காக வாதாடிய வழக்கறிஞர் கூறுவது என்னவெனில் காவல் துறைக்குத் தெரிவிக்க அதிக கால தாமதம் ஏற்பட்டதாக கூறுகிறார். பாதிக்கப்பட்ட பெண் 9 வயது ஆன குழந்தை என்பதாலும் யாரிடமும் சம்பவத்தைப் பற்றிக் கூறக்கூடாது என்று மிரட்டிய தோடு மீறிக் கூறினால் அவளுடைய அப்பாவையும், அம்மாவையும் கொன்று விடுவதாக மிரட்டியதில் முக்கிய சாட்சி1 பயந்து சொல்லாமல் இருந்திருக்கிறார். ஆனால் நோயுற்ற பின்பு மருத்துவரிடம் அழைத்துச் சென்ற பின்பு மருத்துவர் முக்கிய சாட்சி8, தனியார் மருத்துவர் முக்கிய சாட்சி 6 சென்னை மருத்துவ கல்லூரி மருத்துவர் ஆகியோரிடம் கூறுகிறார் இந்த இடத்தில் மிக முக்கியமாக கவனிக்கவேண்டியது 2 வது முறையாக 2.7.2008ல் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டு மருத்துவரிடம் 7.7.2003–ல் ஒரு மருத்துவ பரிசோதனையும் 10.7.2003 அன்று ஒரு மருத்துவ பரிசோதனையும் நடந்திருக்கிறது. எனவே காவல் துறைக்கு அறிக்கை தருவதில் அதிகக் காலதாமதம் இருந்ததாகக் கூறமுடியாது.

22. இந்த இடத்தில் மதிப்பிற்குரிய உச்ச நீதிமன்றம் தில் தர்சிங் v/s பஞ்சாப் மாநில அரசுவழக்கு அறிக்கை 2006 AIR, SCW 4247 கூறுகிறது.

''சாதாரணமாக நடைமுறையில் ஒரு திருமணம் ஆகாத பெண் பாலியல் வன்முறையில் பாதிக்கப்படும் போது விளம்பரமாக அந்த கொடிய சம்பவத்தை கூற முடியாது மேலும் அவமானமான உணர்வும் இருக்கும் போது தன் குடும்ப பெயர் மற்றும் கௌரவத்தை கெடுக்கும் என்பதை எண்ணி சொல்லதயங்குவது இயற்கை. எனவே முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய காலதாமதம் ஆவதை காரணம் காட்டி வழக்கை தள்ளுபடி செய்யக்கூடாது இப்போதைய வழக்கிலும் இது பொருந்தும் என்பதோடு அதிக கால தாமதம் ஆகிவிடவும்வில்லை அந்த குறைந்த பட்ச காலதாமதமும்கூட பாதிக்கப்பட்டவரை குற்றம் சாட்டப்பட்டவர் மிரட்டியதாலும் பிற காரணங்களாலும் இருக்கிறது.

23. தண்டிக்கப்பட்டவரின் சார்பாக பேசியவர் வழக்குகொடுத்தவரின் தோற்றம் பாலியல் பலாத்காரத்திற்கு உட்பட்டவர் போல தெரியவில்லை என்கிறார். அதை இந்த நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இந்த வழக்கில் வழக்கு தொடுத்தவர் ஒரு குழந்தை இரக்கமில்லாமல் பாலியல் வன்முறைக்கு ஆளாகி இருக்கிறது. அப்படி இருக்கையில் முக்கிய சாட்சி 1 குற்றம் சாட்டப்பட்டவரை எதிர்த்து மறுக்கவோ, போராடவோ முடியாது முக்கிய சாட்சி 1 பயமுறுத்தப்பட்டு யாரிடமும் சொல்லக் கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறாள் எனவே முக்கிய சாட்சி1 எல்லாவற்றையும் மறைத்து வீட்டிற்கு போய் விட்டாள். குற்றம்சாட்டப்பட்டவரின்சார்பாக வாதாடியவர் மருத்துவர் DW2 பாலியல் பலாத்காரமாக இருக்காது என்று கூறுவதாக கூறுகிறார். அந்த சாட்சி அறிக்கையே மிகத் தெளிவாகக் கூறுவது என்னவென்றால் ஒரு குழந்தை பாலியல் பலாத்காரத்திற்கு உட்படும்போது காயங்கள் மாறுபடும் ஏனென்றால் அவசரமாக ஈடுபடுதல் மற்றும் மன நிலையை பொருத்து காயங்கள் ஏற்படும் என்று கூறுகிறது, நீதிமன்ற வழக்கில் பதில் அளித்த DW 2 இந்தக்காயங்கள் மேற்ச்சொன்ன காரணங்களின் அடிப்படையில் வழக்குத் தொடுத்தவரின் மேல் முக்கிய சாட்சி 1 ஏற்பட்டிருக்கலாம் என்று மிகத் தெளிவாகக் கூறுகிறார்.

24. இறுதியாக தண்டனையை குறைக்குமாறும் அதற்குக் காரணமாக அவர்கூறிய குற்றஞ்சாட்டவர் L.L.M. படித்தவர் என்கிறார் விசாரனை செய்த நீதிமன்றம் அளித்த தண்டனையான 10 வருடம் என்பது பிரிவு 376 (2) (F) இந்திய குற்றவியல் சட்டத்தின் படிகுறைந்தபட்ச தண்டனை ஆகும். பிரிவு 376 (2)படி தகுந்த மற்றும் சிறப்பு காரணங்களுக்காகவும் தண்டனையை குறைக்கலாம் ஆனால் காரணங்களை தீர்ப்பில் விவரிக்கப்படவேண்டும் என்று இருந்தாலும் இந்த வழக்கைப்பொருத்த வரை அந்த தண்டனையை குறைப்பதற்காக சிறப்பு காரணங்களே இல்லை.

இங்கே நாம் ஒன்றைச் சொல்ல வேண்டும் பாலியல் பலாத்காரம் என்பது ஒரு தனி நபரை எதிர்த்து குற்றம் அல்ல ஒரு சமூகத்தையே எதிர்த்து நடக்கும் குற்றமாகும் இந்த வழக்கில் வழக்குத்தொடுத்துள்ளதோ 9 வயது ஆன ஒரு குழந்தை. அதுவும் இரக்கம் இல்லாமல் அவளுடைய பள்ளியைச் சேர்ந்த அவளுடைய உடற்பயிற்சி ஆசிரியர்ராலேயே என்பது மிக மிகக் கொடுமையாகும்.

25. சமீபத்தில் மதிப்பிற்குறிய உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஒன்றில் தன் வகுப்பு அறையில் மாணவிகளிடமே தவறாக நடந்து கொண்ட ஆசிரியர் பற்றிய வழக்கில் கூறியது கவனிக்கத்தக்கது ‘‘......ஆசிரியரின் பங்கு என்பது மிகவும் முக்கியம் வாய்ந்தது ஆகும் ஆசிரியர்களின் மீது பொறுப்புகள் கொடுக்கப்பட்டிருந்தபோது அவர்கள் உயர்ந்த பொறுப்பும் முன்மாதிரியாக நடந்து கொள்வேண்டியவர்களும் அவர். அவருடைய நடத்தையும் நடவடிக்கைகளும் ஒரு ‘‘ரிசி’’ போன்ற இருக்க வேண்டியதோடு பெற்றோர் ஸ்தானத்திலும் இருக்க வேண்டியவர் என்பதால் கடமை, பொறுப்பு போன்றன அவரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் தன் நடத்தையின் மூலம் இந்த ஆசிரியர் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நம்பிக்கையை மோசடி செய்து ஏமாற்றி இருக்கிறார்.

26. இதுபோலவே இந்த வழக்கிலும் ஒரு உடற்பயிற்சி ஆசிரியராக இருந்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் நம்பிக்கையை இந்தக் குற்றத்தை செய்ததின் மூலம் வஞ்சித்து இருக்கிறார். அப்படி இருக்கும் போது இந்த நீதிமன்றம் வெறுக்கத்தக்க கொடிய குற்றத்தைச் செய்த இவர் மீது இரும்புக்கரங்களால் தண்டிக்க வேண்டும், இந்தக் கண்ணோட்டத்தில் பார்த்து இந்த நீதி மன்றம் அவருடைய தண்டனையை குறைப்பதற்கு வழி இல்லை என்று கூறுகிறது.

27. மேற்சொன்ன காரணங்களின் அடிப்படையில் இந்த நீதிமன்றம் சவாலுக்கு உட்படுத்தப்பட்ட நீதிமன்ற தீர்ப்பை சட்டத்திற்கு புறம்பானது என்றோ, சாட்சியங்கள் இல்லாதது என்றோ கருதவில்லை, விசாரித்த நீதி மன்றத்தில் அவருடைய குற்றம் நிருபிக்கப்பட்டதால் தண்டிக்கபடுகிறார் எனவே தண்டனையை குறைக்க கேட்டுக் கொண்டவிண்ணப்பம் தள்ளுபடி செய்யப்படுகிறது. கூடுதல் மாவட்ட செசன் நீதிபதி (விரைவு நீதி மன்றம் I) செங்கல்பட்டு அளித்த 7.11.2006 தேதியிட்ட தீர்ப்பு S.C.No. 317 /2005 உறுதி செய்யப்படுகிறது.

28. இந்த விஷயத்திலிருந்து நாம் வெளிவரும் முன் சில விஷயங்களை நீதிமன்றம் சொல்ல நினைக்கிறது. குழந்தை தவறான முறையில் பயன்படத்தப்படுவது நாளுக்கு நாள் அதிகரித்து கொண்டு வருகிறது. அதிலும் குறிப்பாக பள்ளிகளில் துஷ்பிரயோகம் என்பது அதிர்ச்சி அளிக்கிறது. குழந்தைகளின் உரிமைகள் மற்றும் பாதுகாப்பைக்

காக்கும் தேசிய கமிஷன் (NCPCR) குழந்தைகளை துன்பப்படுத்தும் புகார்கள் மற்றும் பாலினக் கொடுமை, சித்ரவதை அவமானப்படுத்துதல், அடித்துத் துன்புறுத்துதல் மற்றும் அடைத்துவைத்து துன்புறுத்துதல் போன்றவை கடந்த 3 வருடங்களில் 3 மடங்கு அதிகரித்து உள்ளதாகக் கூறுகிறது. 2007 –2008ல் 34 புகார்களும் 2008 2009ல் 68 புகார்களும் குழந்தை உரிமைக் குழு பெற்றது என்றாலும் கடந்த வருடம் 95 புகார்களே 21 மாநிலங்களில் பெற்றுள்ளதாக கூறுகிற தமிழ் நாட்டைப் பொறுத்தவரை NCPCR 12 புகார்கள் பெற்றுள்ளது.

29. குழந்தைகளை பாலியல் ரீதியாக தவறாகப்பயன்படுத்துதல், பாழாக்குதல் மிகவும் கொடுமையான குற்றங்கள் ஆகும். அப்படி பாதிக்கப்பட்டவர்கள் அந்தக் கொடிய குற்றங்களை வெளியில் சொல்ல முடியாமல் இருட்டிலும், அமைதியிலும் துன்பப்படுவது மிகவும் துரதிஷ்ட வசமானது.

30. 2007 ஆம் வருடத்தில் குழந்தைகள் தவறான முறையில் மற்றும் பாலின ரீதியாக பயன்படுத்தப்பட்டதை பற்றிய இந்திய ஆய்வு ஒன்று கீழ்கண்ட விபரங்களைக் கண்டறிந்ததுள்ளது.

(i) 53,22% குழந்தைகள் ஒன்று அல்லது பலவிதமான பாலின ரீதியான தவறான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படுகிறார்கள்.

(ii) 21.90% குழந்தைகள் மிகக் கொடுமையான பாலின வன்முறைக்கும். 50.76% இதர பாலின வன்முறையையும் எதிர் கொள்கிறார்கள்.

(iii) 50% நபர்கள் (பாலின தவறு செய்யும் நபர்கள்) குழந்தைகளுக்கு தெரிந்தவர் அல்லது நம்பிக்கையிலும் பொறுப்பிலும் இருப்பவர்கள் ஆவர்.

(iv) குழந்தைகள் பலர் தங்களுக்கு நிகழ்ந்ததை யாரிடமும் சொன்னது இல்லை.

31. குழந்தைகள் மற்றும் பெண்கள் மேம்பாட்டுத்துறை அளித்த ஒரு அறிக்கை (யூனிசெப் மற்றும் குழந்தைகளை காப்போம் என்ற அமைப்புகளின் ஆதரவில் நடைபெற்றது) கீழ்கண்டவாறு குழந்தை துஷ்பிரயோகம் பற்றி சொல்லி செல்லுகிறது.

(i) அதிகாரம் மற்றும் நம்பிக்கைக்கு உரிய நபர்களே இந்தக் குற்றத்தை செய்கிறார்கள்.

(ii) பலவிதமான கொடுமைகளில் அதிகம் பாதிக்கப்படுவது 5 முதல் 12 வயது வரையிலான குழந்தைகள் தான்

(iii) 70% குழந்தைகள் தங்களுக்கு நிகழ்ந்த கொடுமையை யாரிடமும் சொல்வதில்லை

(iv) 50%திற்கு அதிகமான குழந்தைகள் 1 அல்லது பலவித பாலின கொடுமைக்கு உள்ளானதாகக் கூறினார்கள்.

32. தமிழ் நாட்டைப்பொறுத்த வரை குழந்தைகள் நலக் கமிட்டி உருவாக்கப்பட்டு பிரிவு 29 (i) 3வயது குழந்தை மற்றும் சிறார்களுக்கான நீதி (குழந்தைகளுக்கான பாதுகாப்பு மற்றும் கவனிப்பு) சட்டம் 2000 மிகவும் மேம்பட்ட முறையில் தொண்டாற்றுகிறது. குழந்தைகள் பல்வேறு விதமான தவறான பயன்பாட்டிலிருந்து பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதையும் இந்த நீதிமன்றம் பாராட்டி பதிவு செய்கிறது.

33. மேலும் இந்த நீதி மன்றம் குழந்தைகள் பாதுகாப்பு அமைப்பு (CIF) 1996 ஜீன் மாதம் தேசிய அளவில் உருவாக்கப்பட்டு 24 மணி நேரமும் செயல்பட்டுவரும் தொலைபேசி அழைப்பு சேவை ஆகும். துன்பத்திலுள்ள குழந்தைகள் 1 to 18 வயது இருந்தால் அவர்களை மீட்டு எடுத்து தங்குமிடம், மருத்துவ வசதி, பாதுகாப்பு, ஆதரவாளர் உதவி, வழிகாட்டல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் போன்ற சேவைகளில் ஈடுபடுத்துகிறது. இந்தியாவிலுள்ள எல்லா நகரங்களுக்கும் இந்த 1098 என்ற எண் உபயோகப்படுத்தலாம் தற்போது BSNL சென்னை, ஒட போன், ஏர்டெல், ஏர்செல், ரிலையன்ஸ், டாடா இன்டிகாம் போன்றவைகளில் இந்த எண் 1098 இலவசமாக அணுகலாம். சைல்டு லையன் 1098 84 நகரங்களில் செயல்படுகிறது இவற்றில் தமிழ் நாட்டில் மற்றும் சென்னை, மதுரை, திருச்சி, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கடலூர், நாகப்பட்டினம் மற்றும் காஞ்சிபுரம் (மகாபலிபுரம்) ஆகிய இடங்களில் தொண்டு நிறுவனங்களால் இந்திய அரசாங்கத்தின் பண உதவியோடு சைல்டுலைன் நடைபெற்று வருகிறது. சமூகப் பாதுகாப்புத்துறையின் கமிஷனர் சென்னை சைல்டு லைன், ஆலோசனைக் கமிட்டியின் தலைவர் ஆவார்.

34. 1974 ஆம் வருடம் இந்திய அரசாங்கம் குழந்தைகள் பற்றிய தேசியக் கொள்கை ஒன்றை தயாரித்து தேசத்தின் குழந்தைகள் மிக உயர்ந்த முக்கிய பொக்கிஷங்கள் என்று அறிவித்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எனவே மாநில மற்றும் மத்திய அரசு குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் பற்றிய அக்கரையில் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டியது கடமையும் ஆகும். இந்திய அரசாங்கத்தின் சட்டத்துறை குழந்தைகள் மீது பாலின ரீதியாக குற்றங்கள் நடைபெறுவதை தடுப்பதற்காக சட்ட வரைவு ஒன்றை ஏற்படுத்தி பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு கொண்டுவந்து இருக்கிறது. குழந்தைகள் மீது பாலின துஷ்பிரயோகம் நிகழ்வதை தடுக்க ஒரு சிறப்புச் சட்டம் கொண்டு வர வேண்டியது அவசியமாகும்

பெறுநர்

1. கூடுதல் மாவட்ட மற்றும் செசன்ஸ் நீதிபதி
(விரைவு நீதிமன்றம் – I)
செங்கல்பட்டு

2. அரசு வழக்கறிஞர்
சென்னை உயர்நீதி மன்றம்

## பெண் குழந்தைகள் உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் – ஆய்வு

திருநெல்வேலியில் உள்ள வான்முகில் என்ற தொண்டு நிறுவனம் நடத்திய ஆய்வறிக்கையின் மூலம், அதிக அளவில் சுமங்கலித் திட்டத்தின் கீழ் மில்களில் வேலை செய்யும் பெண்கள் உடல் மற்றும் மனரீதியாக பாதிக்கப்படுகின்றனர் என்பது தெரியவந்திருக்கிறது. வான்முகில் அமைப்பின் இயக்குனர் எம்.ஏ.பிரிட்டோ கூறுகையில், 15 சமூகப் பணி மையங்கள் மற்றும் சமூக பணியாளர்கள் சுமங்கலித் திட்டத்தினால் தென் தமிழகத்தின் கிராமப்புற பெண்களின் மீதான விளைவுகளை ஆய்வு செய்தனர்.

இந்த ஆய்வு, மில்களில் வேலை செய்த மற்றும் வேலை செய்து கொண்டிருக்கும் பெண்கள் மற்றும் உறவினர்களும் சேர்ந்து மொத்தம் 1638 பேரிடம் நடத்தப்பட்டது. அவர்களில் 673 பேர் திருநெல்வேலி மாவட்டத்திலும், 585 பேர் தூத்துக்குடியிலும், 207 பேர் சிவகங்கையிலும் மற்றும் 173 பேர் விருதுநகரிலும் உள்ளனர். பிரிட்டோ அவர்களின் ஆய்வுப் படி 18 சதவீத பெண்கள் 15 வயதிற்கும் கீழ் சுமங்கலித் திட்டத்தின் கீழ் வருகின்றனர். 60 சதவீத பெண்கள் 15 முதல் 18 வயதுக்குள் வருகின்றனர். 89.92% பெண்கள் எட்டாம் வகுப்பு அல்லது பத்தாம் வகுப்பு தேர்ச்சி பெற்றவர்கள்.

வேலையின்மை, ஏழ்மை, திருமண வரன் அமையாமை, தொழிற்சாலைகளின் வளர்ச்சி ஆகிய காரணங்களால் கிராமபுற பெண்களை இந்த திட்டத்தில் கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் ஈரோடு மாவட்டத்தில் வேலை செய்கின்றனர். இவர்கள் அனைவரும், எஸ்சி, எஸ்டி, எம்பிசி இனத்தைச் சேர்ந்தவர்கள். 76.60 சதவீத குடும்பங்களின் ஆண்டு வருமானம் 30,000 ரூபாய். வேலை செய்யும் பெண்கள் கூடுதலாகவும் வேலை செய்ய கட்டாயப்படுத்தப்படுவதால் அவர்கள் உடல் நிலை பாதிக்கிறது. இவற்றில் 56.11 சதவீத பெண்கள் மட்டுமே உறுதி செய்யப்பட்ட தொகையை பெறுகின்றன. மேலும் 26 சதவீதப் பெண்கள் விரல்கள் வெட்டப்பட்டும், பாலியல் தொல்லைகளாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் பெண்கள் கொத்தடிமைகளாகவும், குழந்தை தொழிலாளர்களாகவும் ஆக்கப்படுகின்றனர். திரு.பிரிட்டோ அவர்கள் இந்த சட்டத்தை முற்றிலுமாக அகற்றவும், பெண் குழந்தைகள் இடமாற்றத்தை தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசுக்கு பரிந்துரைத்தார். இந்தப் பத்திரிக்கையாளர் சந்திப்பில் 21 வயது பெண் ஆவுடையாச்சி குடும்ப சூழ்நிலை காரணமாக இந்தத் திட்டத்தில் கட்டாயபடுத்தி சேர்க்கப்பட்டார் மற்றும் ஒரு தினக்கூலி கூறுகையில், தனது 4 பெண் குழந்தைகளில் இரண்டு பெண் குழந்தைகளை இந்த வேலையில் குடும்ப சூழ்நிலை காரணமாகவும், அனுப்பினேன். இப்போது எனது ஒரு குழந்தை மனநிலை சரியில்லாமல் இருக்கிறது என்பது பகிர்ந்து கொள்ளப்பட்டது.

**– Indian Express, 5.3.11**

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் பிரிவு 12(1)(c) மற்றும் பிரிவு 13(1)ஐ மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்துதல் – சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும் மற்றும் இயக்குநர்களுக்கும் அனுமதி வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

---

## பள்ளிக் கல்வித் (சி2) துறை

அரசாணை(நிலை)எண்.9

நாள்:18.01.2011
(திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 4)
படிக்கப்பட்டவை:

1. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை இயக்குநரின் கடித எண்.1–15/10– EE4, நாள் 23.11.2010
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித ந.க.எண்.9437/ஈ3/2010, நாள் 20.12.2010

**ஆணை:–**

1. குழந்தைகளுக்கான தொடக்கக்கல்வியும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக கருதப்பட ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு தகுந்த திருத்தம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனையொட்டி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009, மைய அரசால் இயற்றப்பட்டு, இச்சட்டம் 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவச தொடக்கக் கல்வி வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் தகுந்த விதிகளை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009இல் பிரிவு 13(1)–இல் எந்த ஒரு பள்ளியும் குழந்தையை சேர்க்கும்போது எந்த ஒரு பரிசீலனை நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது என்றும், மாணவர் சேர்க்கையின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறையை தெளிவாக கூறியுள்ளது என்றும், முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மொத்த குழந்தைகளில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அருகாமை பகுதியிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவுகளை சார்ந்தவர்களாக சேர்த்து அவர்களுக்குத் தொடக்கக் கல்வி முடியும் வரையில் இலவச கட்டாய தொடக்கக் கல்வி வழங்க வேண்டும் என்று பிரிவு 12(1)(c)-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. மேற்கண்ட இரண்டு பிரிவுகளில் குறிப்பிட்டவைகளைச் செயல்படுத்துவது தொடர்பாக புதுடெல்லி, மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநரிடமிருந்து கீழ்க்கண்ட வழிகாட்டுதல்கள் பெறப்பட்டுள்ளன.

   அ. முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மொத்த மாணவர்களில் குறைந்தது 25 விழுக்காடு இடங்களை அருகாமை பகுதியிலுள்ள நலிந்த பிரிவுகள் மற்றும் வாய்ப்புகள் மறுக்கப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு வழங்குதல் வேண்டும். அவ்வாறு சேர்க்கும்போது அவர்களுக்கு தேர்வுகள் நடத்துவதோ (Test) அல்லது வாய்மொழி வினாக்கள் (Interview) கேட்பதோ கூடாது. விண்ணப்பங்களைப் பெற்று Random Selection முறையில் 25 விழுக்காடு மாணவர்களை தெரிவு செய்தல் வேண்டும்.

   ஆ. எஞ்சியுள்ள 75 விழுக்காடு இடங்களைப் பூர்த்தி செய்யும்போது ஒவ்வொரு பள்ளியும் பள்ளி சேர்க்கைக்கான சரியான அடிப்படைக் கோட்பாடுகளுடன் (Rational) கூடிய வரையறுக்கப்பட்ட கொள்கையைப் (Policy) பின்பற்றுதல் வேண்டும். எந்த ஒரு சமயத்திலும் குழந்தையினுடைய இதர தகுதிகளையோ (Profiles), பெற்றோருடைய கல்வித் தகுதியையோ கருத்தில் கொள்ளக் கூடாது.

சேர்க்கைக்கான கொள்கையை பொதுமக்களுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகள் பள்ளிக் கையேடுகளில் (Prospectus) தெரியப்படுத்துதல் வேண்டும். மேற்கண்ட 25 விழுக்காடு சேர்க்கை மற்றும் 75 விழுக்காடு சேர்க்கை என்ற இரண்டு சேர்க்கையின்போதும் முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மாணவர்கள் சேர்க்கையின்போது அவர்களிடம் தேர்வுகள் நடத்துவது (Test) வாய்மொழியாக வினாக்கள் கேட்பது (Interview) போன்ற எந்த ஒரு பரிசீலனை நடைமுறைக்கும் மாணவர்களை உட்படுத்தக் கூடாது.

4. மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டுள்ள மேற்கண்ட வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிகளுக்கு சுற்றறிக்கை வாயிலாக இதனை தெரியப்படுத்திடவும், பள்ளி நிர்வாகங்கள் இதனை கடைபிடிக்கின்றார்களா என்பதை உறுதி செய்யும் அதிகாரத்தை சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும், இயக்குநர்களுக்கும் வழங்க அனுமதி வழங்குமாறு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றம் பயிற்சி இயக்குநரின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சடடம் 2009–ன் கீழ் பிரிவு 12 (1) (c) மற்றும் பிரிவு 13(1) தொடர்பாக மனிதவள மேம்பாட்டுத் துறை இயக்குநரிடமிருந்து மேலே பத்தி 3ல் பெறப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை செயல்படுத்துவது தொடர்பாக பள்ளிகளுக்கு சுற்றறிக்கை வாயிலாக தெரியப்படுத்திடவும், <u>பள்ளி நிர்வாகங்கள் இதனை கடைபிடிக்கின்றார்களா என்பதை உறுதி செய்யும் அதிகாரத்தை</u> சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும் மற்றும் இயக்குநர்களுக்கும் வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவ. ஜோதி ஜெகராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்
சென்னை – 6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர்,
சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை–6.
<u>நகல்:</u>–
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.
நிதி(கல்வி–11)துறை, சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009 பிரிவு 31 உட்பிரிவு 3ன் கீழ் மாநில குழந்தைகள் கல்வி உரிமை ஆணையம் ஏற்படுத்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

## பள்ளிக் கல்வித் (சி2) துறை

அரசாணை(நிலை)எண்.7 — நாள்:18.01.2011
(திருவள்ளுவர் ஆண்டு 2042 தை 4)

படிக்கப்பட்டவை:

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக்கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழு தலைவரின் கடிதம் நாள் 28.10.2010.

**ஆணை:–**

குழந்தைகளுக்கான தொடக்கக்கல்வியும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக கருதப்பட ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு தகுந்த திருத்தம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனையொட்டி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009, மைய அரசால் இயற்றப்பட்டு, இச்சட்டம் 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவச தொடக்கக் கல்வி வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் தகுந்த விதிகளை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் பிரிவு 31 உட்பிரிவு 3ன் கீழ் ''மாநில குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம்'' (State Commission for Protection of Child Rights) இல்லாத மாநிலங்களில் அம்மாதிரியான ஒரு ஆணையத்தை உருவாக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.

2. 2005ல் மத்திய அரசால் இயற்றப்பட்ட குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையங்கள் சட்டம் தேசிய அளவில் ஒரு ஆணையத்தையும் (National Commission for Protection of Child Rights) மாநிலங்கள் அளவில் ஆணையங்களையும் (State Commissions for Protection of Child Rights) உருவாக்கிட வழி வகை செய்யப்பட்டுள்ளது.

3. தமிழ்நாட்டில் மாநில குழந்தைகள் உரிமைப் பாதுகாப்பு ஆணையம் அமைக்கும் கருத்துரு அரசின் ஆய்வில் உள்ளது. இவ்வாணையம் ஏற்படுத்தப்படும் வரையில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கல்வி உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் குழந்தைகள் கல்வி உரிமை ஆணையம் (Right to Education Protection Authority) ஒன்றை உருவாக்கலாம் என குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழு தலைவர் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

4. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச்சட்ட ஆலோசனைக்குழு தலைவரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலக்கப்பட்டது. மாநில குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையம் உருவாக்கப்படும் வரையில் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள கல்வி உரிமைகளை பாதுகாக்கின்ற வகையில் மாநில குழந்தைகள் கல்வி உரிமை ஆணையம் (REPA) ஒன்றை ஏற்படுத்தலாம் எனவும் இவ்வாணையம் ஒரு இடைக்கால அமைப்பாக செயல்படலாம் எனவும் இக்கல்வி உரிமை ஆணையம் கீழ்க்கண்ட வகையில் தலைவர் மற்றும் உறுப்பினர்களை கொண்டு செயல்படலாம் எனவும் முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

1. இவ்வாணையத்தின் தலைவராக சிறந்த கல்வி நிபுணர் அல்லது உயர்நீதிமன்ற நீதிபதியாக இருந்தவர் அல்லது குழந்தைகள் உரிமைகளை பாதுகாப்பதில் மிகச் சிறந்த முறையில் பணியாற்றியவர் செயல்படலாம்.
2. தலைவர் தவிர இன்னும் இரண்டு உறுப்பினர்கள் நியமிக்கப்படலாம். அந்த இரண்டு உறுப்பினர்களில் ஒருவர் பெண் உறுப்பினராகவும் நியமிக்கலாம். இந்த உறுப்பினர்கள் கீழ்க்கண்ட துறைகளில் நிண்டகாலம் பணியாற்றிய அனுபவமும், சிறந்த ஆற்றலும் உடையவராய் இருத்தல் வேண்டும்.

   1) கல்வி

   2) குழந்தைகள் நலம்

3) இளம் வயது குற்றவாளிகள் அல்லது நிராகரிக்கப்பட்ட குழந்தைகள் அல்லது ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு அல்லது குறைபாடுடைய குழந்தைகள் பராமரிப்பு

4) குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு

5) குழந்தை மனோதத்துவம் அல்லது சமூகவியல்

6) சட்டத் துறை

5. இவ்வாணையம் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தில் விவரிக்கப்பட்டுள்ள கல்வி உரிமைகளை நிறைவேற்றுவது சார்பான பணிகளை மேற்கொள்ளும். மேலும் மாநில ஆலோசனை குழு (State Advisory Council) சுட்டிக்காட்டும் பிரச்சனைகளில் மேல் நடவடிக்கை எடுக்கும். இவ்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் பதவிகளுக்கான விதிமுறைகள் 2006ல் உருவாக்கப்பட்ட தேசிய குழந்தைகள் உரிமை பாதுகாப்பு ஆணையத்திற்கான விதிமுறைகளைப் (National Commission for Protection of Child Rights) பின்பற்றியதாக இருக்கும்.

6. மாநில குழந்தைகள் கல்வி உரிமை ஆணையத்திற்கு (REPA) தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனம் செய்வது தொடர்பாக உரிய கருத்துருவினை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு உறுப்பினர் செயலர், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் பள்ளிக்கல்வி இணை இயக்குநர்(மேநிக) சென்னை–6 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

தேவ. ஜோதி ஜெகராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

தலைவர்,
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக்குழு,
சென்னை–6.
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6.
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் இயக்குநர்,
சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,
அனைவருக்கும் கல்வி இயக்ககம்,
சென்னை–6.
உறுப்பினர் செயலர்,
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக்குழு,
சென்னை–6.
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79. (2 நகல்கள்)
(தமிழ்நாடு அரசிதழில் அறிவிக்கை வெளியிடும் பொருட்டு)

நகல்:–
சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத்துறை
சென்னை–9.
குழந்தைகளுக்கான இலவச மற்றும்
கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட ஆலோசனைக் குழுவின்
அனைத்து உறுப்பினர்கள்
மாண்புமிகு முதலமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர்,
சென்னை–9.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

# யார்தான் கவலைப்படுகிறார்கள் ?

– டி.கே. ராஜலட்சுமி

1989 நவம்பர் 20 ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நாள். அன்றுதான் குழந்தை உரிமைகள் உடன்பாடு (சிஆர்சி), ஐக்கிய நாடுகள் சபையின் பொதுக்குழுவில் உறுப்பு நாடுகளின் கையெழுத்திற்காகவும் அங்கீகாரத்திற்காகவும் உறுதிப்பாட்டிற்காகவும் ஒரு தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. 1990 செப்டம்பர் 2 அன்று அது நடைமுறைக்கு வந்தது. அதன் பின் 193 நாடுகள் அதனை அங்கீகரித்துள்ளன. அமெரிக்கா மட்டும் அதை அங்கீகரிக்கவில்லை. அந்த உடன்பாட்டின் இருபதாம் ஆண்டு நிறைவையொட்டி ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நிதியம் (யுனிசெஃப்) “உலகக் குழந்தைகளின் நிலை” பற்றிய அறிக்கையின் ஒரு சிறப்புப் பதிப்பை வெளியிட்டுள்ளது. 80 ஆண்டுகளுக்கு முந்தைய உலக பொருளாதார மந்தநிலைக்குப் பிறகு ஏற்பட்ட உலக நிதி மற்றும் பொருளாதார நெருக்கடியையொட்டி இந்த அறிக்கையும் வெளியிடப்பட்டது.

அனைத்து நாடுகளின் அரசுகளும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொண்டு குழந்தை உரிமைகள் உடன்பாட்டுக் கொள்கைகளைச் செயல்படுத்த வேண்டும் என்றும், உலக நிதி நெருக்கடியினால் ஏழைகளுக்கும் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் காணத்தவற வேண்டாம் என்றும் அந்த அறிக்கை கேட்டுக்கொள்கிறது. “தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாகவும், வெளி நிலைமைகளிலிருந்து வரும் இதர சவால்களின் காரணமாகவும் குழந்தை உரிமைகளுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களைக் குறைத்து மதிப்பிட்டுவிடக்கூடாது,” என்று அது எச்சரிக்கிறது. நோய்த்தடுப்பு அளவு நிலைமைகளை சீராகப் பராமரிக்கவும் அடிப்படை மருத்துவ கவனிப்பு சேவைகளை வழங்கவும் அரசாங்கங்கள் பெரிய அளவுக்குத் திட்டச் செலவுகளை ஒதுக்க வேண்டும் என்று அந்த அறிக்கை வேண்டுகோள் விடுக்கிறது. ஆயிரமாண்டுக்கால முன்னேற்ற இலக்குகளை அடைய, நிதி நெருக்கடி காலகட்டத்திற்கு முன்பு இருந்ததை விடவும் கூடுதலாக மிகப்பெரும் அளவுக்கு உறுதிப்பாடும் முதலீடுகளும் தேவைப்படுகின்றன என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

குழந்தை உரிமைகளுக்கு மரியாதையளிப்பதில் உள்ள மதிப்பீடுகளில் ஒரு மாற்றம் தேவைப்படுகிறது என்பதை அறிக்கை அங்கீகரிக்கிறது. “சமுதாய மாற்றம்” “மறுகட்டுமானம்” என்பன போன்ற சொல்லாடல்கள் அறிக்கையில் கையாளப்பட்டுள்ளன. 1990களுக்குப் பிந்தைய உலகப் பொருளாதாரச் சூழலில் இந்தச் சொல்லாடல்கள் ஏதோ நடைமுறைக்கு வந்துவிட்டது போல அநேகமாக எல்லோராலும் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. 2009 ஆகஸ்டில் அறிக்கை அச்சுக்குச் சென்றபோது, சில முன்னேற்றகரமான அறிகுறிகள் தென்பட்டபோதிலும் உலகப் பொருளாதார நிலைமை நிச்சயமற்றதாகவே இருந்தது என்று அறிக்கை தெரிவிக்கிறது. உலக வறுமை நிலை, குழந்தை மேம்பாடு, ஊட்டச் சத்து ஆகியவை தொடர்பான புதிய உலகளாவிய மதிப்பீடுகள் வருகிறபோதுதான் குழந்தை உரிமைகள் மீதான முழுமையான தாக்கங்கள் என்ன என்பது தெரியவரும் என்றும் அறிக்கை கூறுகிறது. “இந்த நெருக்கடியால் பல தலைமுறைகளுக்கும் குழந்தை உரிமைகள் கைவிடப்பட்டன என்ற ஒரு வரலாறு எழுதப்படுவது தவிர்க்கப்பட வேண்டுமானால், எல்லா காலங்களிலும் குழந்தைகளின் உரிமையாகிய அவர்களுக்கான அத்தியாவசிய சேவைகள், பாதுகாப்பு, பங்கேற்பு ஆகியவற்றை உறுதிப்படுத்துவது, ஆதரிப்பது, சாத்தியமானால் விரிவுபடுத்துவது என்ற வழிமுறைகளே தேர்ந்தெடுக்கப்பட்டாக வேண்டும்,” என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொருளாதார நெருக்கடியோடு சேர்ந்து குழந்தைகளின் உடல்நலம், கல்வி ஆகியவற்றுக்கான அரசுச் செலவுகள் குறையுமானால், அல்லது போதுமான அளவுக்கு செலவிடப்படவில்லையானால், இந்த சேவைகளுக்கான சுமைகள் குடும்பங்களின் மீதும், சமூகங்களின் மீதும்தான் விழும்; அது ஏற்கெனவே பெண்குழந்தைகளும் பெண்களும் குறைந்துள்ள நிலைமையை மேலும் தீவிரப்படுத்தும் என்று அறிக்கை எச்சரிக்கிறது. ஒரு வகையில், குழந்தை உரிமைகளை நிலைநாட்டுவதற்கு உயர்ந்த முன்னுரிமை அளிக்கப்பட்டிருந்திருக்குமானால் அதில் பெரும் முன்னேற்றம் எற்பட்டிருக்கும் என்று அறிக்கை ஒப்புக்கொள்கிறது. “உலகை இன்று சூழ்ந்துள்ள ஆழ்ந்த நிதி நெருக்கடியும் பொருளாதார நெருக்கடியும், வேறு எதையும் செய்திராவிட்டாலும், உலகளாவிய முன்னுரிமைகள் குறித்தும் பொருளாதார முன்னுரிமைகள் குறித்தும் ஒரு ஒரு விவாதத்திற்கு வழிவகுத்துள்ளன,” என்று அறிக்கை கூறுகிறது. வளரும்

நாடுகளின் குழந்தைகளுக்கு பருவநிலை மாற்றத்தினால் ஏற்படும் தாக்கம் குறித்து அறிக்கை இவ்வாறு கூறுகிறது: ‘‘பழைய வழிமுறைகளிலான நடவடிக்கைகள் இனியும் கையாளத்தக்கவை அல்ல... உலகத்திற்குத் தன்னைத் தானே மறுகட்டுமானம் செய்துகொள்வதற்கு ஒரு தனிச்சிறப்பான வாய்ப்பு கிடைத்துள்ளது... பருப்பொருள் சார்ந்த சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து வளர்ப்பதில் மட்டுமல்லாமல், உலகில் வாழ்கிற மனித இனத்தில் மிக எளிதில் பாதிக்கப்பட்டுவிடக்கூடியவர்களையும் பாதுகாத்து வளர்ப்பதில் தன்னைப் புத்தம் புதிதாக ஈடுபடுத்திக்கொள்ளக்கூடிய வகையில் தன்னைத் தானே மறுகட்டுமானம் செய்துகொள்கிற ஒரு தனிச்சிறப்பான வாய்ப்பு உலகத்திற்குக் கிடைத்திருக்கிறது.’’

அறிக்கையில் இப்படியெல்லாம் வருங்காலம் பற்றிய எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளபோதிலும், பெரும்பாலான அரசாங்கங்கள், சில முன்னேறிய நாடுகளின் அரசுகளின் வழிகாட்டலில், தங்களது பழைய வழிமுறைகளைக் கைவிடுவதில் முனைப்புக் காட்டுவதாகத் தெரியவில்லை. இங்கொன்றும் அங்கொன்றுமாக சில நாடுகளில் தனிப்பட்ட சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உதாரணமாக பிரேசில், சீனா ஆகிய நாடுகளில் கல்வியை சமச்சீரான முறையில் பரவலாக்கவும், குழந்தைகளுக்கான சமூகப் பாதுகாப்பு முறைகளை ஏற்படுத்துவதற்கும் கூட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆனால் சில வளரும் நாடுகள் இன்னும் இதையெல்லாம் நிராகரிக்கிற போக்கில்தான் உள்ளன. வளரும் நாடுகளின் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் பற்றிய ஒரு ஆய்வு முடிவுகள் இந்த அறிக்கையில் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. அதில் பின்வரும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது: ஆய்வு மேற்கொள்ளப்பட்ட வளரும் நாடுகள் 144; அவற்றில் குறைந்த வருமானம் உள்ள 49 நாடுகளில் 19 நாடுகளும், நடுத்தர வருமானம் உள்ள 95 நாடுகளில் 49 நாடுகளும் எவ்வித சமூகப் பாதுகாப்புத் திட்டத்தையும் செயல்படுத்தவில்லை; மொத்த நாடுகளில் மூன்றில் ஒரு பங்கு நாடுகளில் மட்டுமே ஏதோ ஒரு வகையான பண ஒதுக்கீடு என்பது நடைமுறையில் இருக்கிறது. தற்போதுள்ள நடைமுறைகள் வருந்தத்தக்க அளவில் போதுமானதாக இல்லை என்பதையே இந்தத் தகவல் தெளிவுபடுத்துகிறது.

இன்றைய பொருளாதாரச் சீர்குலைவுகளின் தாக்கம் எந்த அளவுக்குக் குழந்தைகளுக்கு பாதிப்புகளை ஏற்படுத்தும் என்பதை அழுத்தமாகக் கூற விரும்புகிற அந்த அறிக்கை, 1997ல் பொருளாதார அதிர்ச்சிக்கு உள்ளான (ஆசிய நிதி நெருக்கடி) வளரும் நாடுகளை உதாரணமாக எடுத்துக்காட்டுகிறது. அந்த நாடுகளில் 5 வயதிற்குள் மரணமடையும் குழந்தைகளின் விகிதம் அதிகரித்தது. பள்ளியில் சேர்க்கப்படும் குழந்தைகளின் விகிதம் குறைந்தது. பாதுகாப்பின்மை பெருகியது. அத்துடன் மருத்துவம், கல்வி ஆகியவற்றுக்கான அரசு செலவுகள் குறைக்கப்பட்டன. இந்தோனேசியா, தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் அரசுகள் குழந்தைகளுக்கான ஊட்டச்சத்துத் திட்டங்களை வலுப்படுத்தின, கல்வி உதவி நிதிகள் (ஸ்காலர்ஷிப்) மூலம் கல்விக்கான வாய்ப்புகளை பெருமளவுக்கு விரிவுபடுத்தின.

அர்ஜன்டினா நாடு 2002ல் தனக்கு ஏற்பட்ட கடன் நெருக்கடியை மாறுபட்ட முறையில் சமாளித்தது. ஏழைக்குடும்பங்களைப் பாதுகாக்க, அவர்களில் வேலையின்றியிருக்கும் குடும்பத்தலைவர்களுக்குப் பொருளாதார உதவித் திட்டத்தை அந்த அரசு தொடங்கியது. இது அந்த நாட்டில் நிலவிய கடுமையான வறுமை நிலையை வெகுவாகக் குறைத்தது. மெக்சிகோ அரசின் ஏழைக்குழந்தைகளுக்கான கல்வி–மருத்துவம்–சத்துணவு இணைந்த (ஆப்பர்டூனிடேட்ஸ்) திட்டம், பிரேசில் அரசின் குடும்பப் பாதுகாப்பு (புரோகிராம் சாடீ டா ஃபேமிலி) திட்டம் ஆகிய சமூகநலத் திட்டங்களின் பலனாக சிசு மரண விகிதம் குறைந்தது, வறுமை விகிதமும் வீழ்ச்சியடைந்தது. பிரேசில் நாட்டில் ஏற்பட்ட ஆட்சி மாற்றமும் மக்களின் வறுமை விகிதம் குறைந்ததில் முக்கியப் பங்காற்றியது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

சில நாடுகளில் செயல்படுத்தப்பட்ட பணம் வழங்கல் திட்டம் போன்ற சமூக நலத்திட்டங்களுக்கு அவற்றிற்குரிய சிறப்பும் வலிமையும் உண்டு என்றபோதிலும், சமூக நலத் துறைகளுக்கான நிதி முதலீடுகளை அதிகரிக்கும் வகையில் நீண்ட காலத் தலையீடுகள் தேவைப்படுகின்றன. அதுதான் வேலை வாய்ப்புகளைப் பெருக்கும், மக்களின் வாங்கும் சக்தியையும் அதிகரிக்கும். சமூக நலத்திட்டம் எதுவும் இல்லாத நாடுகள், வருமான ஏற்றத்தாழ்வுகள் பெரிய அளவுக்கு உள்ள நாடுகளாகவும் இருப்பது தற்செயலானதல்ல.

உணவுப் பொருள்களின் விலை உயர்வும் கவலைக்குரிய ஒரு காரணமாகும். இது வளரும் நாடுகளில் வறுமை அதிகரிப்பதற்கும் ஊட்டச்சத்து குறைவதற்கும் (போதுமான அளவுக்கு உணவு எடுத்துக்கொள்ளாததன் காரணமாகவும் மீண்டும் மீண்டும் தாக்குகிற தொற்று நோய்களின் காரணமாகவும் இவ்வாறு ஊட்டச்சத்துக் குறைவு ஏற்படுவதாக விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது) இட்டுச் செல்லும் என்று அறிக்கை கூறுகிறது. வளரும் நாடுகளில் உள்நாட்டு உணவுப்பொருள்களின் விலை ‘‘வரலாறு காணாத அளவுக்கு’’ அதிகமாக இருக்கிறது

என்று அறிக்கை கூறுகிறது. இதை நிரூபிக்கக்கூடிய ஆதாரங்கள் இந்தியாவில் ஏராளமாக உள்ளன.

சிறு குழந்தைகளுக்கு நோய்த்தீர்ப்புடன் இணைந்த உணவு வழங்குதல் போன்ற மாற்று நடவடிக்கைகளும், நுண் சத்துகளுக்கான வாய்ப்பை ஏற்படுத்துதல், தரமான மருத்துவ கவனிப்பு, ஊட்டச்சத்து அளவு கண்காணிப்பு போன்ற இணை நடவடிக்கைகளும் தேவை என்று அறிக்கை பரிந்துரைக்கிறது. எனினும் இது சொல்வதற்கு எளிதாக இருந்தாலும் நடைமுறைப்படுத்துவது எளிதில்லை. மூன்றாம் உலக நாடுகளது சிசுக்கள் மற்றும் குழந்தைகளுடைய பட்டினிப் பிரச்சனையைக் கையாள்வது என்ற பெயரில் இறங்குகிற பெரும் வர்த்தக நிறுவனங்கள் கூறுகிற தீர்வுகளால் கிடைக்கிற இணை உணவுகளின் தன்மை, நுண் சத்துகள் ஆகியவை குறித்து அரசுகள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டியது முக்கியம். இதுபோன்ற நடவடிக்கைகள் அப்போதைக்கு ஒரு தற்காலிக முயற்சிகளா மட்டுமே இருக்கும் என்பதோடு, உண்மையான பிரச்சனைகளிலிருந்து – அதாவது சமூகப் பாதுகாப்பிற்கும் சத்துணவுத் திட்டங்களுக்கும் அரசுகள் போதுமான அளவுக்கு நிதி ஒதுக்குவதில்லை என்கிற பிரச்சனையிலிருந்து – திசை திருப்புதாகவும் இருக்கின்றன.

## உண்மையாகத் தேவைப்படுவது

அனைவருக்குமான பொதுவிநியோக முறை அல்லது இதர வழிகளில் குடிமக்களுக்கு சமச்சீர் ஊட்ட உணவுகள் கிடைக்கச் செய்வது, அனைவருக்குமான இலவச மருத்துவத் திட்டங்கள் மூலம் எல்லோருக்கும் நலவாழ்வுச் சேவைகளை வழங்குவது, எல்லோருக்கும் கட்டாய இலவசக் கல்வி வழங்குவது ஆகிய நடவடிக்கைகளுக்கு அரசுகள் முதல் முன்னுரிமை அளிக்க வேண்டும் என்பதை நலவாழ்வு சேவைத் துறைகளிலும் ஊட்டச்சத்து சேவைத்துறைகளிலும் ஈடுபட்டுள்ள பலரும் பரவலாக ஏற்றுக்கொள்கிறார்கள். 120 வளரும் நாடுகளில் 1975 முதல் 2000 வரையிலான காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வு, மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரே ஒரு விழுக்காடு அளவுக்கு 15 ஆண்டுகளுக்குக் கல்விக்காக உயர்த்தப்பட்டால் கூட, வறுமையைக் குறைப்பதோடு அனைத்துக் குழந்தைகளும் தொடக்கப்பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்தும் என்பதை சுட்டிக்காட்டுவதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிந்தைய காலத்தில் உரிமைகள் தொடர்பான விவாதங்களின் விளைவாக உருவான குழந்தை உரிமைகள் மாநாட்டு உடன்பாடு கடும் சோதனைகளுக்கு உள்ளாகியுள்ளது. 19ம் நூற்றாண்டுத் தொழிற்சாலைகளிலோ, உலகப் போர்களிலோ குழந்தைகள் எப்படிக் கையாளப்பட்டார்கள் என்பதில் மனக்கொதிப்படையக்கூடிய எவரும், இன்றைக்கும் ஐந்து வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளின் மரண விகிதம் எவ்வளவு என்பதையும், ஊட்டச் சத்துக் குறைவான குழந்தைகளின் எண்ணிக்கையையும், படை வீரர்களாகக் குழந்தைகள் பயன்படுத்தப்படுவதையும், பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுவதையும் கண்டு அதே அளவுக்குக் கொதிப்படைவார்கள். ‘‘உலகம் முழுவதும் குழந்தைகள் அடிமைத்தனம் என்று சொல்லக்கூடிய நிலையில் தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். மற்ற நாடுகளுக்குக் கடத்தப்பட்ட கட்டாயப்படுத்தப்பட்ட வேலைகளிலோ பாலியல் தொழிலிலோ ஈடுபடுத்தப்படுகிறார்கள். போர்களில் பங்கேற்பவர்களாகக் குழந்தைகள் கொடூரமாக நடத்தப்பட்டு, இரையாக்கப்படுகிறார்கள். நேற்றைய உலகத்தை விட இன்றைய உலகம் எவ்விதத்திலும் சுய மனநிறைவு கொள்ள முடியாத அளவுக்கு இது நீடிக்கிறது. சட்டத்தை எதிர்கொள்ள வேண்டிய நிலைமைகள் ஏற்படுகிறபோது குழந்தைகள் அவர்களுக்கு உரிய கவுரவத்தோடும் மதிப்போடும் நடத்தப்படுவதில்லை,’’ என்று சிறப்பு அறிக்கை தெரிவிக்கிறது.

போர்களிலும் மோதல்களிலும் ஈடுபடுத்தப்படுகிற குழந்தைகள் வன்முறைக்கும் உரிமையிழப்புக்கும் உள்ளாகிறார்கள் என்றால், அமைதிப் பகுதிகளில் அல்லது போர் அல்லாத சூழல்களில் உள்ள குழந்தைகளின் நிலைமை ஒன்றும் சிறப்பானதாக இல்லை. சம்பந்தப்பட்ட அரசாங்கங்கள் சமூக நலத்திட்டங்களைச் செயல்படுத்துவதில்லை என்பதாலும், மிகக் குறைவாகவே முதலீடு செய்கின்றன என்பதாலும் பெரும்பாலான குழந்தைகள் தங்களது அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். குறைந்த வருமானம் உள்ள பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக உள்ள குழந்தைகள் இரண்டாந்தர அல்லது மூன்றாந்தரக் குடிமக்களாகவே நடத்தப்படுகிறார்கள். அவ்வப்போது சில தற்காலிக நடவடிக்கைகள் மட்டுமே அவர்களுக்காக மேற்கொள்ளப்படுகின்றன. அந்த நடவடிக்கைகளும் கூட நன்கொடை வழங்குகிற அல்லது நிதியுதவி செய்கிற அமைப்புகளை திருப்திப்படுத்துகிற வகையில்தான் இருக்கின்றனவேயன்றி, தரம் மிகுந்த அர்த்தமுள்ள மாற்றங்களை ஏற்படுத்துவதாக இல்லை. மொத்தத்தில் இந்த அறிக்கை சுட்டிக்காட்டுவது என்னவென்றால், குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாக உலக அளவில் கருத்துரீதியாக ஒப்புக்கொள்ளப்படுகிறது என்றபோதிலும் கூட, கடந்த நூற்றாண்டில் ஏற்பட்ட சில முன்னேற்றங்களை நிராகரிக்கிற வகையில் புதிய

வடிவிலான சுரண்டல்கள் முளைத்துள்ளன என்பதைத்தான்.

ஒட்டுமொத்த நிலைமையும் கூட எவ்விதத்திலும் ஊக்கமளிப்பதாக இல்லை. பேறுகால மரணம் என்பது இன்னும் கட்டுப்படுத்த முடியாததாகவே தொடர்கிறது. 1990 முதல் ஆண்டுதோறும் 5,00,000 பேறு கால மரணங்கள் நிகழ்வது இன்னும் தொடர்கிறது என்று அறிக்கை தெரிவிக்கிறது. இவற்றில் பெரும்பாலான பேறுகால மரணங்கள் வளரும் நாடுகளில்தான் – குறிப்பாக சஹாரா பாலைவனம் சார்ந்த நாடுகளிலும் தெற்கு ஆசிய நாடுகளிலும்தான் – நிகழ்கின்றன. இத்துடன் இணைந்ததாக எடைக்குறைவான குழந்தைகள் பிறக்கின்றன. இது அன்னையர்களுக்கான ஊட்டச்சத்தும், நலவாழ்வு நிலையும் மோசமாக இருப்பதன் வெளிப்பாடேயாகும். இதில் கவனிக்கத்தக்க ஒரு அம்சம் என்னவென்றால், இவற்றில் பல நாடுகளில் வெளியிலிருந்து பொருளுதவிகள் வருகின்றன, அரசு சாராத தலையீடுகள் நடக்கின்றன. இன்றைக்கும் கூட இந்த சவாலை தேசத்தின் பொறுப்பாக எடுத்துக்கொள்ளாமல், அரசு–தனியார் கூட்டு அல்லது சமூகப் பங்கேற்பு என்ற பெயரில் வெளிஒப்பந்தமாகத் தனியார் துறையினரிடம் விடுவதற்குத்தான் அரசாங்கங்கள் விரும்புகின்றன. ஆகவே, கடந்த 20 ஆண்டுகளில் பேறுகால மரணங்களின் விகிதம் ஏன் கொஞ்சமும் குறையவில்லை என்பது வியப்பளிக்கவில்லை.

வளரும் நாடுகளின் மக்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் அடிப்படை சுகாதார வசதிகள் இல்லாமல் வாழ்கிறார்கள் என்று அறிக்கை தெரிவிக்கிறது. தூய்மையான குடிநீர் வசதி என்பது இன்னும் எண்ணற்ற மக்களுக்கு ஒரு தொலைதூரக் கனவாகவே நீடிக்கிறது. மேலும் இவற்றில் சில நாடுகளில் பல்வேறு தரப்பினருக்குமிடையேயான மிகப் பெரிய அளவுக்கு வருவாய் இடைவெளி இருக்கிறது. ஒரு நாளில் அரை டாலருக்கும் குறைவான வருமானத்துடன் வாழ்கிறவர்கள் ஒரு புறமிருக்க, இதே நாடுகளில் இருந்துகொண்டு உலக மகா பணக்காரர்களின் பட்டியலில் ஈடுபடுகிற பெரும் கோடீசுவரர்களும் இருக்கிறார்கள். குழந்தை உரிமைகள் மாநாட்டு உடன்பாடு ஏற்கப்பட்டு 20 ஆண்டுகளுக்குப் பிறகும் அது வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பது மகிழ்ச்சியளிப்பதாக இல்லை என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

**– Frontline, January 2010**

# மாவட்ட சமூக நல அலுவலர் ஆய்வறிக்கை அளித்த பிறகும் எந்த நடவடிக்கையும் இல்லை குமரி இல்லங்களில் குழந்தைகள் தவிப்பு

கொல்லங்கோட்டில் உள்ள ஒரு குழந்தைகள் இல்லத்தில் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லை என்று மாவட்ட சமூக நல அலுவலர் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்த பிறகும் வருவாய் பிரிவு அலுவலர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

ஸ்டீபன் குழந்தைகள் இல்லம் வேலாயுதன் நகர் கொல்லங்கோடு காவல் எல்லைக்குள் உள்ளது. ஒ.ஹமர்லால் என்பவர் “குழந்தைகள் இல்லம் ஆனது எந்த ஒரு அடிப்படை வசதிகள் இன்றியும், கழிவறைகள் மிக மோசமாகவும் இருக்கிறது. குழந்தைகள் துன்புறுத்தப்பட்டும் வருகின்றனர். ஒரு சிறிய அறையில் ஆண் மற்றும் பெண் குழந்தைகள் ஒன்றாக 15க்கும் மேல் தங்கவைக்கப்பட்டுள்ளனர். மேலும் அவர்கள் இல்லத்தில் உள்ள அனைத்து வேலைகளிலும் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றனர். விடுதி நடத்துவதற்கான முறையான அனுமதியும் பெறவில்லை. தூய்மையான சுற்றுச்சூழலில் இன்றியும், குழந்தைகளுக்கான நீதி சட்டத்தின் கீழ் அமையவேண்டிய இடவசதிகள் இன்றியும் ஸ்டீபன் இல்லம் செயல்படுகின்றது”, என்கிறார் ஒ.ஹமர்லால். இதற்கிடையில், கடந்த ஜனவரி 26 ஆம் தேதி 2010 அன்று மாவட்ட சமூக நல அலுவலர் எஸ்.லட்சுமி ஆய்வு மேற்கொண்டு, ஆய்வறிக்கையை நிர்வாக கோட்ட அலுவலரிடமும், வட்டாட்சியரிடமும் சமர்ப்பித்து நடவடிக்கை எடுக்க பரிந்துரைத்தார்.

ஆய்வறிக்கையின்படி ஸ்டீபன் இல்லத்தில் எந்த விதமான அடிப்படை வசதிகளும் இல்லை. ஆண் மற்றும் பெண் குழந்தைகளுக்கு ஏற்றவாரு எந்த வித வசதிகள் செய்து தரப்படவில்லை. மேலும் விழுப்புரம் மற்றும் ராமநாதபுர மாவட்ட குழந்தைகள் தங்கள் பெற்றோரிடமிருந்து ஏற்பு கடிதம் இன்றி தங்கவைக்கப்பட்டுள்ளனர். பத்மா மாவட்ட சமூக நல அலுவலர் ராமநாதபுரம் நிர்வாக கோட்ட அலுவலரிடம் நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளார். தகவல் உரிமை சட்டத்தின் கீழ் மாவட்ட சமூக நல அலுவலரின் அறிக்கை நகல் பெற்றுள்ளார்.

**– Indian Express, 5.3.11**

# “ஒரு நாளைக்கு அஞ்சு தடவ அடிக்குறாங்க”

பள்ளிக்கூடத்திற்கு செல்லும் மாணவ, மாணவிகள் எக்கச்சக்கமான சுமையை ஏற்கெனவே தூக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இந்த நிலையில் மாணவிகள் பாலியல் ரீதியான கொடுமைகளைக் கூடுதலாகச் சுமக்கிறார்கள். பள்ளிக் கூடங்களுக்குச் செல்லும் இந்திய மாணவிகளில் பாதிப்பேர் பாலியல் ரீதியாக தொல்லைகளுக்கு அளாகிறார்கள் என்று பிளான் இன்டர்நேஷனல் என்ற அமைப்பு மேற்கொண்ட அய்வில் தெரிய வந்தள்ளது. லண்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் இந்த அமைப்பு, குழந்தைகளின் நிலைமை பற்றி சர்வதேச அளவிலான ஆய்வுகளைச் செய்து வருகிறது. அண்மையில் இந்த அமைப்பு சார்பில் மேற்கொண்ட ஆய்வில் பாலியல் ரீதியிலான தொல்லைகள் மற்றும் பள்ளிக்கூடங்களில் மாணவர்களுக்கு கடுமையான தண்டனைகள் வழங்குவது ஆகியவை பற்றி ஏராளமான தகவல்கள் அம்பலமாகியுள்ளன.

50 விழுக்காடு மாணவர்கள் பாலியல் ரீதியான தொல்லைகளை இந்தியாவில் சந்திக்கையில், 65 விழுக்காடு மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் கடுமையான தண்டனைகளைப் பெறுகிறார்கள். இத்தகைய தண்டனைகள் வழங்குவது சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இத்தகைய தண்டனைகள் வழங்குவது சட்டரீதியாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதையும் மீறி இத்தகைய கொடுமைகள் நிகழத்தான் செய்கின்றன. பாலியல் ரீதியான தொல்லைகள் மற்றும் மாணவர்கள் மீதான தண்டனைகள் ஆகியவை மிக அதிகமாக இருக்கின்றன என்பதை பிளான் இன்டர்நேஷனல் ஆய்வறிக்கை எடுத்துக்காட்டுகிறது. 13 நாடுகளில் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. அவ்வாறு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட இந்த 13 நாடுகளில் இந்தியா மூன்றாவது இடத்தில் உள்ளது. இந்தியாவிற்கு முன்பாக அமெரிக்கா மற்றும் பிரேசில் ஆகிய இரண்டு நாடுகளும் உள்ளன. கொலம்பியா, ஈக்குவடார், பெரு, நிகரகுவா, எல் சால்வடார், குவாதிமாலா, டொமினிகன் குடியரசு, பொலிவியா, ஜோர்டான் மற்றும் எகிப்து ஆகிய நாடுகள்தான் ஆய்வு நடைபெற்ற மற்ற நாடுகளாகும்.


மற்ற நாடுகளில் பாலியல் ரீதியான கொடுமைகள் இருக்கும் நிலையில், இந்தியாவைப் பொறுத்தவரை இரண்டு வகையான கொடுமைகள் உள்ளன. பாலியல் ரீதியாக மட்டுமில்லாமல், சாதி ரீதியாக கொடுமைகளை அனுபவிக்க வேண்டி வருகிறது. குழந்தைகளுக்கு எதிரான வன்முறைகளுக்கு இந்த இரண்டும் முக்கியமான காரணங்களாகக் கூறப்படுகிறது. தண்டனைகளைத் தாங்கிக் கொள்ள முடியாமல் ஏராளமான குழந்தைகள் பள்ளிக்கூடங்களுக்குச் செல்வதையே நிறுத்தும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்களைத் தண்டிக்கும் கொடுமைகள் பல வகைகளில் இந்தியாவில் நடக்கின்றன. குச்சிகளாலும், கைளாலும் அடிப்பது, பல நிலைகளில் நிற்க வைப்பது, நாற்காலியோடு சேர்த்துக்கட்டி வைப்பது என்று மாணவர்களுக்கு வழங்கப்படும் தண்டனைகளில் வடிவங்கள் ஏராளம். இந்திய அரசு தந்துள்ள விபரங்களோடு தனக்குக் கிடைத்துள்ள விபரங்களை பிளான் இன்டர்நேஷனல் ஒப்பிட்டும் பார்த்துள்ளது.

2007 ஆம் ஆண்டு தில்லி மாநில மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஒரு ஆய்வை நடத்தியது. பள்ளிகளில் வழங்கப்படும் தண்டனைகள் குறித்து 3 ஆயிரம் பள்ளிக்குழந்தைகளிடம் கேள்விகள் கேட்கப்பட்டன. இதேபோல் நாடு முழுவதும் ஆய்வு நடத்தப்பட்டது. மொத்தம் 13 மாநிலங்களில் 12 ஆயிரத்து 500 குழந்தைகளை ஆய்வுக்குழுவினர் சந்தித்தனர். அவர்களிடம் கேட்ட கேள்விகளுக்குக் கிடைத்த பதில்களைத் தொகுத்ததில் கடுமையான தண்டனைகள் பள்ளிக்கூடங்களில் தரப்படுவதாக குழந்தைகள் கூறின. மாணவிகளைக்(45 விழுக்காடு) காட்டிலும் மாணவர்களுக்கு (54 விழுக்காடு) அதிகமாகத் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. அதேபோல், பாலியல் ரீதியாகத் தாங்கள் தொல்லைகளுக்கு உள்ளாவதாக கிட்டத்தட்ட பாதிப்பேர் ஆய்வுக்குழுவினரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்திய மாநிலங்களில் அசாம், மிசோரம் மற்றும் உத்தரப்பிரதேசம் ஆகிய மாநிலங்களில் தான் மாணவர்களுக்கு அதிகமான அளவில் தண்டனை தரப்படுகிறது. மிகவும் குறைவான அளவில் தண்டனை கிடைக்கும் மாநிலங்களாக ராஜஸ்தான் மற்றும் கோவா ஆகிய இரண்டு மாநிலங்களும் உள்ளன. 13 மாநிலங்களில்தான் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அதிகமான மாணவர்கள் இருப்பதால் எங்களால் கவனிக்க முடியவில்லை. அதனால்தான் அடிக்கிறோம் என்று ஆசிரியர்கள் தரப்பில் கூறப்படுகிறது. ஒரு நாளைக்கு சராசரியாக ஐந்து முறை மாணவர்கள் அடிவாங்குகிறார்கள் என்று இந்த ஆய்வு கூறுகிறது. பள்ளிப்படிப்பை பாதியிலேயே நிறுத்துவது உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுவதால் அரசுக்கு ஏற்படும் இழப்பையும் பிளான் இன்டர்நேஷனல் கணக்கிட்டுள்ளது. இந்தக்கணக்கு எவ்வளவு சரியானது என்பது கேள்விக்குறியாக இருந்தாலும் இழப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது என்பது தான் உண்மை.

**– தீக்கதிர், 3.11.10**

For Private Circulation Only




*Education Material Published on behalf of*

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**

*No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai - 600 015.*
*Ph : 044-2235 3503, Fax : 044-2235 5905, E-mail : hrf@md3.vsnl.net.in,*
*Website : humanrightsadvocacyandresearchfoundation.org*